பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 5 வெள்ளிக்கிழமை (21-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:299

# அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை உயர்நீதிமன்றம் இன்று விசாரிக்கும்!

## தீர்ப்பு திங்கள் வெளியாகும்

கொழும்பு,செப்ரெம்பர்21

**நீதி, பொலீஸ், தேர்தல், பொதுச் சேவை ஆகிய நான்கு துறைகளை நிர்வகிப்பது தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு வழி செய்யும் அரசமைப்பின் 17 ஆவது திருத்தப் பிரேரணையை உயர் நீதிமன்றம் இன்று ஆராயவிருக்கின்றது.**

**இந்தத் திருத்தப் பிரேரணை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் படுவதாக அங்கீகரிக்கப்படுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை எது என்பதை உயர்நீதிமன்றம் தீர்மானித்து, திங்கட்கிழமைக்கு முன்னர் தனது முடிவை சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்து மூலம் அறிவிக்கும்.**

இந்த அரசமைப்புத் திருத்தம் நாட்டுக்கு அவசரமானது என அத்திருத்தத்திற்கு அமைச்சரவை சான்றுரைத்துள்ளதால் -

இந்தத் திருத்தச் சட்டமூலம் மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் அவசர அவசரமாக இன்றே நடத்தி முடிக்கும்.

பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் இந்த விசாரணையை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உயர்நீதிமன்றத்தின் முடிவு சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் அங்கு வாசிப்பார்.

இந்த அரசமைப்புத் திருத்தப் பிரே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 4 ஆணைக்குழுக்களும் சுதந்திரமாக செயற்படுவதை உறுதிப்படுத்த முடிவு!

### ஐ.தே.க. - ஜே.வி.பி. நேற்றுக் கூடித் தீர்மானம்

கொழும்பு,செப்.21

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் மூலம் புதிதாக ஸ்தாபிக்கப்படும் நான்கு ஆணைக்குழுக்களும் - ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலையீடு இன்றி - சுதந்திரமாகச் செயற்படக் கூடியதாக இருப்பதை அந்த அரசமைப்புத் திருத்தத்தில் உறுதி செய்வது என ஐ.தே.கட்சியும் ஜே.வி.பியும் தீர்மானித்துள்ளன.

சுதந்திர ஆணைக்குழுக்கள் தொடர்பாக தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து இரு கட்சிகளினதும் பிரதிநிதிகளும் நேற்றுக் கூடி விரிவாக ஆராய்ந்தனர்.

ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பான அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை திங்களன்று நாடாளுமன்றத்துக்கு அரசு கொண்டுவருவதை ஆதரிப்பது என்று இரு கட்சிகளும் முடிவு செய்தன.

இந்தக் குழுக்கள் சுதந்திரமாக - ஜனாதிபதி மற்றும் பிரதமரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுக்கள் அமைக்கும் விவகாரம்: எதிரணி சபாநாயகருடன் இன்று பேச்சு

கொழும்பு,செப்.21

நாடாளுமன்ற சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவை எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இன்று சந்திக்கவுள்ளனர்.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு ஏற்றவாறு எதிர்வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களது கூட்டத்தில் சபாநாயகரைச் சந்திப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களது கூட்டத்தில் ஜே.வி.பி. சார்பில் பங்கேற்ற நந்தன குணதிலக அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் யுத்தநிறுத்தம்!

லண்டன்,செப்.21

வடக்கு - கிழக்கில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து இரண்டு கட்டங்களாக வழங்கப்படுவதை ஒட்டி இன்றும் நாளையும், எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் அரசுப்படைகளும் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தி அமைதி பேணும் என்று தாம் எதிர்பார்ப்பதாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம் தொடர்பாக யுனிசெப் அமைப்புக்கு நேற்று அனுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் வெடிப்பொருள் மீட்பு

வவுனியா,செப்.21

கிளிநொச்சி உதய நகரில் படையினரால் முன்னர் புதைத்துவைக்கப்பட்டதாகக் கூறப்படும் பெருந்தொகையான வெடிப்பொருள்கள் புலிகளின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்.பி.ஜி. ஷெல்கள் - 7, 60 மி.மீ. மோட்டார் ஷெல்கள் - 13, 120 மி.மீ மோட்டார் ஷெல்கள் - 3, 80 மி.மீ மோட்டார் ஷெல் - 1, 40 மி.மீ. மோட்டார் ஷெல்கள் - 3 ஆகியனவே மீட்கப்பட்டுள்ளன. (உ-3)

## குட்டி விமானங்களைத் தயாரித்த வர்த்தகர் நீர்கொழும்பில் கைது!

கொழும்பு,செப்.21

நீர்கொழும்புப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இரண்டு முதல் நான்கு அடி வரை நீளமான சிறிய ரக விமானங்கள் நான்கையும் விமானங்களைத் தயாரிப்பதற்கான உதிரிப் பாகங்களையும் பொலீஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

நீர்கொழும்பு வாவியில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்றைப் பறக்க விடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வர்த்தகர் ஒருவரைத் தாங்கள் கைது செய்ததாகவும் -

அவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் அவரது வீட்டில் இருந்து சிறிய ரக விமானங்கள் மீட்கப்பட்டதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர்.

சிறிய ரக விளையாட்டு விமானங்களை உருவாக்கி அவற்றைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் வசம் ஹெலிகள், விமானங்கள்

### 'லங்காதீப' வெளியிடும் தகவல் இது

கொழும்பு,செப்.21

விடுதலைப் புலிகளிடம் விமானங்கள், ஹெலிகள் இருப்பதாக 'லங்காதீப' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 'தமிழ் ரைகர்ஸ்' (TAMIL TIGERS) என்ற இணையத் தளத்தை ஆதாரம் காட்டி அப்பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

'றொபின்சன் ஆர். 44 அஸ்றோ' ரகத்தைச் சேர்ந்த - 4 பேர் பயணம் செய்யக் கூடிய - ஹெலிகள் புலிகளிடம் உள்ளன என்றும் -

அந்தக் ஹெலியின் படத்தையும் அது பற்றிய பூரண விவரங்களையும் அந்த 'இணையத்தளம்' வெளியிட்டிருப்பதாகவும் -

இவ்வாறான தகவல்கள் முதன் முதலாக தற்போதே வெளிவந்துள்ளன எனவும் -

'லங்காதீப' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் கட்டாய ஆள்திரட்டலில் ஈடுபட்டதாக முறைப்பாடு இல்லை

### செஞ்சிலுவைப் பிரதிநிதி தெரிவிப்பு

மட்டக்களப்பு,செப்.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் கட்டாய ஆள்திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இதுவரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்று அந்தக் குழுவின் மட்டக்களப்புக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், இது தொடர்பாக கேட்கப்பட்டபோதே, அவர் இவ்வாறு பதிலளித்தார் என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

விடுதலைப் புலிகள் மட்டுமன்றி எந்த ஒரு தரப்பினரும், கட்டாய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய கல்லூரி மாணவர் இருவரும் புதன் விடுவிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.21

கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி மாணவர் இருவரும் யாழ்.நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இரு மாணவர்களின் கைது தொடர்பாக அதிபர்கள் சங்கத் தலைவரும், யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான க.இராஜதுரை, யாழ்.பொலீஸ் அத்தியட்சகருடன் கலந்துரையாடியதை அடுத்து இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி உயர்தர வகுப்பு கற்கும் மாணவனான

(12 ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர்களே!

MANKIND IS OUR BUSINESS

வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது!
உங்கள் குழந்தையை போலியோ பீடிக்காமல் இருக்க
நாளை (22.09.2001) சனிக்கிழமை தவறாது
போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!

மறந்துவிடாதீர்கள்!!

PolioPlus

Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கடைகளில் பாணின் விலை, நிறையை செயலக அதிகாரிகள் குழு சோதித்தது!

## உரும்பிராயில் 400 கிராம் பாண் 12 ரூபாவுக்கு விற்பனை

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று வலிகாமத்தின் சில இடங்களில் பாணின் விலை, நிறை என்பன தொடர்பாகக் கடைகளில் திடீர் பரிசோதனைகளை நடத்தியது.

இருபாலை, கோப்பாய், உரும்பிராய் மற்றும் நீர்வேலிப் பகுதிகளில் உள்ள கடைகளில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

பாணின் நிறை, விலை என்பன இடத்துக்கிடம் வேறுபட்டு இருப்பதும் கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்ட விலை, நிறை என்பன பேணப்படாமல் இருப்பதும் இந்த சோதனை நடவடிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்டதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். அரச அதிபர் தலைமையில் பேக்கரி உரிமையாளர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் 450 கிராம் பாணை 12 ரூபாவாக விற்பனை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இந்த நடைமுறையை பேக்கரிகள் இன்னமும் அமுலுக்கு கொண்டு வரவில்லை என்பது தெரிய வந்திருக்கிறது.

இன்னமும் பல இடங்களிலும் 350 கிராம் பாணே விற்பனை செய்யப்படுவது நேற்றைய சோதனையின் போது தெரியவந்தது என்றும் -

உரும்பிராய் பகுதியில் உள்ள கடை ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாணை நிறுத்த போது அது 400 கிராம் எடையுடையதாக இருந்தது என்றும் -

ஆனால் அந்தப் பாண் 12ரூபாவாக விற்பனை செய்யப்படுவது தெரியவந்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

முன்னணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட பாணே இவ்வாறு நிறை குறைவாக விற்பனை செய்யப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-4)

## மனித சங்கிலிப் போராட்டம்:

# மக்களுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் அறிக்கை

யாழ்ப்பாணம்,செப்.21

குடாநாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமாதானத்துக்கான மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

ஈ.பி.டி.பி. அமைப்பினால் அனுப்பப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாண நகரப் பகுதியிலும், வலிகாமம் மேற்கு, தென்மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலும், வடமராட்சியிலும் மட்டுமன்றி இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள தென்மராட்சிப் பகுதிகளும் உட்பட குடாநாடெங்கிலும் மக்கள் தமது சமாதான ஆர்வத்தை வெளிப்படுத்தி மாபெரும் மனித சங்கிலியாகக் கைகோர்த்து நின்றிருக்கின்றனர். எந்தவிதமான வற்புறுத்தலுமின்றி சுயமான விருப்பத்துடன் குறுகிய - கால முன்னறிவித்தலையடுத்து மக்கள் வீதிக்கு இறங்கி தமது உண்மையான விருப்பார்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும் மக்களின் எண்ண வெளிப்படுத்துதலைப் புறந்தள்ளி தத்தமது எண்ணமே மக்களின் அபிப்பிராயமாக ஊடகங்கள் - குறிப்பாக தமிழ் ஊடகங்கள் - எடுத்துரைக்கின்றன. இதனாலேயே நேற்று ஒன்று திரண்டு மாபெரும் மனித சங்கிலியாகக் கைகோர்த்து நின்ற நிகழ்ச்சியை கண்ணாரக் கண்ட போதும் இருட்டடிப்பு செய்யும் வகையிலேயே செய்திகளைப் பிரசுரித்துள்ளன. இது கவலைக்குரியது தான். ஆனாலும் ஊர் வாயை உலை மூடி கொண்டு மூடி விடமுடியாது என்பதே உண்மையாகும்.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் வீதிக்கு இறங்கி மக்களின் எண்ண வேட்கையை வெளிப்படுத்தும் வகையில் சமாதானத்திற்காகக் கைகோர்த்து நின்ற அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கும் உளப்பூர்வமான நன்றியறிதலை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்துகின்றேன் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார் -

இப்படி ஈ.பி.டி.பி. செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி யோகநாதன்

(இலங்கை மின்சார சபை ஊழியர்)

அரியாலையைச் சேர்ந்த குமாரசாமி யோகநாதன் நேற்று (20-09-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - யோகம்மா தம்பதியினரின் புதல்வனும் கமலாவின் அன்புக் கணவரும் துஷாந்தினி (லண்டன்), யசந்தினி (யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் 2 ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சயந்தனின் (லண்டன்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-09-2001) வியாழக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.8, கனகரட்ணம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

(92533)

தகவல்:
யோ.யசந்தினி (மகள்)

## தமிழ்த் தினப் போட்டியில் பங்குபற்றிய

# யாழ்.மாணவர்களை மிரட்டவில்லை என்கிறார் கல்வி அமைச்சின் அதிகாரி

கொழும்பு,செப்.21

கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் கடந்த 15ஆம், 16ஆம் திகதிகளில் இடம்பெற்ற அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டி களில் கலந்துகொண்ட யாழ். மாணவர்கள் சிலர் கல்வியமைச்சின் உயர் அதிகாரி ஒருவரால் கடுமையாக நடத்தப்பட்டதாக வெளிவந்த செய்திகளை அந்த அதிகாரி மறுத்துள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரியான ஜி.பி.அல்பிரட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தினப் போட்டிகளில் முதலாவது கட்டம் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்சியின் போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒரு சில மாணவர்களுடன் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் மிகவும் கடுமையாக நடந்து கொண்டதாகவும் இந்து சமய ஆசாரங்களுடன் வந்த இவர்களைத் தூசித்ததாகவும் சில பத்திரிகைகளில செய்திகள் வெளிவந்தன. இவை குறித்து மேற்படி தமிழ்மொழித் தினப் போட்டிகள் ஒழுங்கமைப்புக்குப் பொறுப்பானவர் என்ற வகையில் விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

★ சகல மாகாணங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான இந்து மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் எனப்பலரும் வருகை தந்து மேற்படி போட்டிகளில் கலந்துகொண்டு மகிழ்ச்சியுடன் சென்றிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் இந்து சமய முறைப்படி விபூதி, பொட்டுக்கள் அணிந்துதான் வந்திருந்தார்கள். மகிழ்ச்சியோடு சென்றார்கள். இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தின் ஒரு பிரபல கிறிஸ்தவ கல்லூரியில் இருந்து இந்த முறை மாத்திரம் வந்து கலந்துகொண்ட மூன்று இந்துப் பிள்ளைகள் இம்சைப்படுத்தப்பட்டார்கள் என்று கூறப்படுவது சுத்த அபத்தமாகும்.

★ போட்டிகள் நடைபெறும் இடங்களில் மாணவர்கள் தங்கிநிற்கும் போது பாடசாலைச் சீருடையை அணிந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது மாணவரின் நலன் கருதியும் போட்டி நம்பகத்தன்மை கருதியும் ஆகும்.

. மாணவர்கள் யாவரும் பாடசாலைச் சீருடையில் பாடசாலை வளவுக்குள் தங்கும் போது.

✪ இவர்கள் பாடசாலை மாணவர்கள் என்பதை அலுவலர்கள் எளிதில் இனங்கண்டு கொள்வர்.

✪ காடைத்தனம் புரிவதற்கு என வரமுயற்சிப்பவர்களை இனங்காண முடியும். (சென்றவருடம் இராமநாதன இந்து மகளிர் கல்லூரியில் இத்தகைய சம்பவமொன்று நடைபெற்றது.)

✪ பாதுகாப்புப் படையினரின் வீண் தொல்லைகளில் இருந்தும் விலகிக் கொள்வதற்கு வாய்ப்புண்டு.

✪ போட்டியிடும் மாணவர்கள் நடுவர்களால் இனங்காணப்பட்டால் சில வேளைகளில் பக்கச்சார்பான தீர்ப்புகளையும் வழங்கிவிடுவார்கள் என்று பலரும் குறை கூறிக்கொள்வார்கள். இந்த நிலைமையினைத் தவிர்த்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

இவ்வாறு பல காரணங்களுக்காகவே பாடசாலைச் சீருடையில் மாணவர்கள் போட்டிகளில் கலந்துகொள்வது வலியுறுத்தப்படுகிறது.

நாம் கடைப்பிடித்து வரும் ஒழுங்கு விதிகளையும், ஒழுக்க விதிகளையும் புறக்கணித்த நிலையில் மாணவர் சிலரும், மாணவருக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரும் நடந்து கொண்டனர். அழைத்து வந்த ஆசிரியர் எங்கள் ஆலோசனையை நல்ல நோக்கத்தோடு கேட்டுப் பிள்ளைகளை நெறிப்படுத்தியிருந்தால் பிள்ளைகள் ஒத்துழைத்திருப்பார்கள்.

சமய சின்னங்களை அணிந்து கொள்வது உண்மை ஆசாரத்திற்காகவே அன்றி வெறும் அழகுபடுத்தலுக்காக இல்லை என்பதை எமது இளம் சமுதாயம் உணர்ந்து கொள்ளும் வகையில் நாம் அவர்களை வழிப்படுத்தல் வேண்டும்.

பல வருடங்களாக நடைபெற்று வரும் தமிழ்த் தினப் போட்டிகளிலே பிராமணப்பிள்ளைகள், பிராமண குலத்து ஆசிரியர்கள், அதிகாரிகள் பலரும் வெளி ஆரவாரமின்றி வெகு ஆசாரத்துடன் கலந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

இந்தத் தமிழ்த் தினவிழாவுக்கு அழைத்து வந்த பிள்ளைகள் மனதில பிழையான ஒரு வீரத்தன்மையினை விதைத்துவிட்ட ஓர் ஆசிரியரும், ஒரு தலைப்பட்சமாக விடயத்தை விசுவரூபமாக்கிய ஒரு சில பத்திரிகையாளர்களும் உள்நோக்கங்களை உணர்ந்து கொள்ளாமல் குறை விரித்துக் குதூகலிப்பதன் காரணம் இந்தத் தமிழ்த் தினத்தை இம்முறை நடைபெற விடாமல் தடுப்பதற்காகவா அல்லது வேறு ஏதும் நோக்கத்துக்காகவா என்பது தெரியவில்லை.

ஓய்வு பெற்ற போதிலும் உயர் அதிகாரிகள், பாடசாலை அதிகாரிகள், தமிழ் ஆர்வலர்கள், ஆசிரிய சங்கத்தினர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்குத் தலைசாய்த்து சன்மானம் கருதாமல் இந்தத் தமிழ்த் தினநிகழ்ச்சியை சிறப்பாக ஒழுங்கமைத்துச் செயற்படுத்தி வரும் எனது பணியினைப் போற்றாதுவிட்டாலும் பரவாயில்லை. தூற்றாது விடுவது தமிழ்த் தாய்க்குச் செய்யும் தலைசிறந்த வணக்கமாய் அமையும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

(ஓ-3)

# சாவல்கட்டு சந்தை விவகாரம்: பிரதேச சபைத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.21

'சாவல்கட்டு சந்தை அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதி வேறு பணிக்கு மாற்றம் - பிரதேச சபைத் தலைவருடனான முரண்பாடு காரணமாக' என்ற தலைப்பில் கடந்த புதன்கிழமை உதயனில் வெளியான செய்தி குறித்து வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் மறுப்பு அறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

மேற்படி விடயம் தொடர்பாக 19.09.2001ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிக்கையை வலிகாமம் தென மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அ. ஜோன்சன் மறுத்துள்ளார்.

எனக்கும் மேற்படி மக்களுக்கும் எந்தவொரு முரண்பாடும் இல்லை. சந்தையை நவீன சந்தையாக புனரமைப்பதற்கு தற்போது உள்ள இடம் போதாதபடியால், அப்பகுதியில் சபையின் நிதியிலிருந்து காணி கொள்வனவு செய்வதற்கு சாவல்கட்டு பொது அமைப்புக்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் காணி கொள்வனவு செய்வதில் காலதாமதம் ஏற்படும் என்றபடியால் தற்போது உள்ள இடத்தில் சந்தையைப் புனரமைப்பதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாவல்கட்டு மக்களுக்கு தொடர்ந்து பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




அமெரிக்கா மீது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பேரில் தமது சோகத்தைத் தெரிவித்த மற்றும் உதவி ஒத்தாசைபுரிய முன்வந்த இலங்கை மக்கள் அனைவருக்கும் அமெரிக்கத் தூதராலயம் தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தமது நன்றியைத் தெரிவிக்க நேரம் தடையாக இருந்த போதிலும் தமது துயரத்தை காண்பிப்பதற்காக அனுப்பப்பட்ட எல்லா சோகச் செய்திகளும் வாஷிங்டனில் அமெரிக்க அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான உதவியை அமெரிக்கத் தூதராலயத்தின் மொத்த சேவகர்களும் மெச்சுவதுடன் இந்தக் கடும் நாள்களில் இது பெரிய ஆறுதலாக அமைந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது.

- அமெரிக்கத் தூதராலயம்.

(C/18333)



வெளிவந்துவிட்டது!

G.C.E. (O/L) 2001

மாணவர்க்கான

சமூகக் கல்வி

மாதிரி வினாத்தாள் - விடைகளுடன்

(புதிய பாடத்திட்டம்)

ஆக்கம்:

திரு.ச.கிருஷ்ணா

எக்சலன்ற் வெளியீடு

பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

(92527)

## 'வரையறையற்ற நீதி நடவடிக்கை'

# ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்த அமெ.படைகள் முழுத் தயார் நிலையில்!

### விமானங்கள், கப்பல்கள் விரைகின்றன

நியூயோர்க்,செப்.21

ஆப்கானிஸ்தான் மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தக் கூடிய முழுத் தயார் நிலையில் அமெரிக்கப் படைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

இந்தப் போர் நடவடிக்கைக்கு 'வரையறையற்ற நீதி நடவடிக்கை' என்று அமெரிக்கா பெயர் சூட்டியிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

அமெரிக்கக் கடற்படையின் 'யு.எஸ். எஸ். தியோடர் ரூஸ்வெல்ட்' என்ற விமானந்தாங்கிப் போர்க்கப்பல் வெர்ஜினியாவில் இருந்துவளை குடா நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

ஏற்கனவே மத்தியதரைக்கடலில் தரித்து நிற்கும் 'யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன்', 'யு.எஸ்.எஸ். என்ரர்பிறைசஸ்' ஆகிய விமானந்தாங்கிக் கப்பலகளை உள்ளடக்கிய போர்க்கலங்களுடன் இதுவும் இணைந்துகொள்ளும்.

அமெரிக்க விமானப்படையின் போரிடும் ராஜாளி என்று வர்ணிக்கப்படும் 'எவ்-16' ரக விமானங்கள் மற்றும் 'எவ்-15' ரக விமானங்கள், 'பி-1' ரக குண்டு வீச்சு விமானங்கள் என்பன ஏற்கனவே வளைகுடாப் பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் தளங்களில் சென்று தரையிறங்கத் தொடங்கிவிட்டன. வளைகுடாவில் உள்ள தளங்களில் அமெரிக்க இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்கப் படைகள் தற்போது தாக்குதலுக்கான உத்தரவை எதிர்பார்த்து மட்டுமே காத்திருக்கின்றன என்று வளைகுடாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

பிரிட்டனும் தனது கடற்படை மற்றும் விமானப்படைகளை வளைகுடா நோக்கி நகர்த்திவருகின்றது. (ம)

**உலக அரங்கில்**

# ஆப்கானிஸ்தானுக்கு வெளியிலும் அமெரிக்கத் தாக்குதல் தொடருமா?

நியூயோர்க்,செப்.21

"சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமா பின்லேடனை ஒழித்துக்கட்டி, பல நாடுகளிலுள்ள அவரது தொடர்பு அமைப்புகளைக் கூண்டோடு அழிப்பதுடன் மட்டும் அமெரிக்காவின் நடவடிக்கை முடிவடைந்துவிடாது."

- இவ்வாறு தெரிவித்துள்ளது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானுக்கு வெளியிலும் அமெரிக்காவின் தாக்குதல்கள் தொடருமா என்ற அச்சம் அவதானிகளிடையே எழுந்திருக்கிறது.

இதற்கு அமைவாக அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுக் கழகம் (எவ்.பி.ஐ.) அண்மையில் வெளியிட்ட தகவலில் -

அமெரிக்கா மீது, கடத்தப்பட்ட விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவருக்கும் ஈராக்கின் உளவாளி ஒருவருக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரிவித்திருந்தது. அத்துடன் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீதான தாக்குதல்களை முதலில் பயங்கரவாதத் தாக்குதல் என்று வர்ணித்த அமெரிக்கா, பின்னர் திடீரென்று அவை அமெரிக்கா மீது தொடுக்கப்பட்ட போர் என்று அறிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு எதிராகத்தான் நடத்தவிருக்கும் பதிலடியை உலக நாடுகள் அனைத்தும் ஆதரிக்கவேண்டும் என்று அமெரிக்கா மிரட்டல் தொனியில் நிர்ப்பந்தித்து வருகின்றது. இதற்காக அது சகல நாடுகளுடனும் தனக்குள்ள பொருளாதார, அரசியல், இராணுவ உறவுகளைத் தீவிரமாகப் பயன்படுத்தியும் வருகிறது.

அமெரிக்காவின் இத்தகைய போக்குகள் அது போரை ஆப்கானிஸ்தானுக்கு வெளியேயும் விரிவாக்க முயற்சிக்கின்றது என்பதையே காட்டுகின்றது - என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ம)

# ஆப்கனை விட்டு பின்லேடன் தாமாக வெளியேற வேண்டும்

## இஸ்லாமிய மதத் தலைவர்கள் கூடி முடிவு

காபூல்,செப்.21

ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்க அமெரிக்கா ஆயத்தமாகி வரும் வேளையில் -

ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி விடுமாறு இஸ்லாமிய மதத் தலைவர்களான உலாமாக்கள், ஒஸாமா பின்லேடனுக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றனர்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்குத் தீர்வாக இஸ்லாமிய மதத் தலைவர்கள் இந்த ஆலோசனையை வெளியிட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

கடும்போக்கு மதத் தலைவர்கள் எனக் கருதப்படும் உலாமாக்கள் காபூலில் ஒன்றுகூடி பலமணிநேரம் நடத்திய ஆலோசனையின் பின்னர் இந்த முடிவை எடுத்ததாக அறிவிக்கப்படுகிறது.

ஒஸாமா பின்லேடனை நாட்டை விட்டு வெளியேற்றி விடுவதன் மூலம் அமெரிக்காவின் தாக்குதலைத் தவிர்க்க முடியும் என்றும் -

அதேநேரம் அமெரிக்கா ஆப்கான மீது வலிந்து தாக்குதல் நடத்த முயன்றால் அதற்கு எதிராகப் புனிதப் போரைத் தொடுக்க வேண்டும் என்றும் -

கூட்டத்தில் கலந்துகொண்ட உலாமாக்கள் பலரும் கருத்து வெளியிட்டதாக தலிபான் வானொலியை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால் அதனை எதிர்கொள்ளத் தக்க வகையில் ஆப்கானிஸ்தானில் மதத் தலைவர்கள் மதச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# பாகிஸ்தானின் பெயரைக் கெடுக்க சதி செய்கிறது இந்தியா

## முஷாரப் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,செப்.21

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாகிஸ்தானின் பெயரைக் கெடுக்க இந்தியா சதி செய்கிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அதிபரும் இராணுவ ஆட்சியாளருமான ஜெனரல் முஷாரப்.

தற்போதைய நிலைகுறித்து நேற்றுமுன்தினம் இரவு அவர் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் 30 நிமிடநேரம் உரையாற்றினார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1971ஆம் ஆண்டு இந்தியாவுடன் ஏற்பட்ட போருக்குப் பின்னர், பாகிஸ்தான் மிக நெருக்கடியான கால கட்டங்களைக் கடந்து வருகிறது. நாட்டின் பாதுகாப்புக்காக மக்கள் தமது உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடு என்று அறிவிக்க வைப்பதற்கும், காஷ்மீர் இலட்சியத்தைக் குலைக்கவும் இந்தியா சதி நடத்தி வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தானுக்கு எதிரான அரசு அமைவதை இந்தியா விரும்புகின்றது.

ஆக்ரா பேச்சுக்களில்கூட உங்களை நான் ஏமாற்றவில்லை. அதுபோல இப்போதும் ஏமாற்றமாட்டேன். அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உதவி செய்ய மறுத்தால் நாட்டின் பெயரைக் கெடுக்க இந்தியாவுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துவிடும். ஏனெனில் வாஷிங்ரனுடன் நெருக்கமாவதற்காகத் தனது இராணுவத் தளங்களை எல்லாம் பயன்படுத்த இந்தியா அனுமதித்துள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல் நடத்துவதைத் தவிர்க்க தலிபான் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சு இடம்பெற்று வருகின்றது. இதற்கென குழு ஒன்று ஆப்கானுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஒரு தவறான முடிவினாலும் நாட்டின் அணுசக்தித் திட்டங்களும் மற்றைய இராணுவத் திட்டங்களும் பாதிக்கப்படும் என்பதால்தான் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க முடிவெடுத்தேன். இந்த முடிவுக்குப் பொதுமக்கள் தமது ஆதரவைத் தெரிவிக்கவேண்டும்" - என்றார். (ம-7)

# மீண்டும் அரசியல் கொலைகளில் ஈடுபடத் தயாராகின்றது சி.ஐ.ஏ.!

## இதுவரை இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்படும்

வாஷிங்ரன்,செப்.21

வெளிநாடுகளில் அரசியல் காரணங்களுக்காக நிகழ்த்தப்படும் படுகொலைகளில் அமெரிக்க ஈடுபாட்டைத் தடுக்கும் வகையில் விதிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி உத்தரவை நீக்குவது குறித்து ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

இந்தத் தடை உத்தரவு விலக்கப்பட்டால் அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ. உளவாளிகள் அமெரிக்க நலன்களுக்காக வெளிநாடுகளில் படுகொலைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

பனிப்போர் காலத்தில் சி.ஐ.ஏ. உளவாளிகளுக்கு இத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதனால அக்காலத்தில் நிகழ்ந்த பல்வேறு அரசியல் கொலைகளின் பின்னணியில் சி.ஐ.ஏ. இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

பின்னர் சோவியத் யூனியன் உடைந்து, பனிப்போர் முடிவுக்கு வந்து, நீண்ட காலத்தின் பின்னர் - இத்தகைய - அரசியல் படுகொலைகளில் சி.ஐ.ஏயின் பங்குக்குத் தடைவிதிக்கும் ஜனாதிபதி உத்தரவு விடுக்கப்பட்டது. கடந்த சில தசாப்தங்களாக அது நடைமுறையில் இருந்து வந்தது.

அண்மையில் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதும் பென்டகன் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்படி ஜனாதிபதி உத்தரவை நீக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் குறித்து ஒரு சிறிய தகவல்தானும் முன்கூட்டியே தெரிந்திருக்கவில்லை. இதனால் தமது புலனாய்வு மற்றும் உளவு நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்துவருகிறது அமெரிக்கா.

"அமெரிக்காவின் புலனாய்வு வளங்களையும், நடவடிக்கைகளையும் முற்று முழுதாக மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்ட அமெரிக்க உளவாளிகளுக்குக் கூடுதல் தற்துணிவும் அதிகாரமும் தேவைப்படுகிறது" - என்று அமெரிக்க துணை அதிபர் டிக்சேனி கூறி இருக்கிறார். (ம)

# அமெரிக்கா மீதான தாக்குதல்கள் 3ஆம் உலகப் போருக்கு வித்திடும்?

## கிரேக்க ஞானி 500 ஆண்டுகளுக்கு முன்பே கூறிவைத்தார்

லண்டன்,செப்.21

அமெரிக்காவில் அண்மையில் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது கடத்தப்பட்ட விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து கிரேக்க ஞானியான நாஸ்டர்டாம்ஸ் 500 ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைத்துள்ளதாகத் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் - உலகின் கடைசி அத்தியாயம் வரை நடைபெறவுள்ள சம்பவங்கள் குறித்து நாஸ்டர்டாம்ஸ் எழுதிவைத்துள்ளார்.

அவர் எழுதி வைத்துவிட்டுச் சென்ற சில விடயங்கள் தற்போது அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்களுடன் மிகச் சரியாக ஒத்துப் போவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நாஸ்டர்டாம்ஸ் தெரிவித் திருப்பது இதுதான்:-

புத்தாண்டு ஒன்றின் ஒன்பதாவது மாதத்தில் வானத்தில் இருந்து ஒரு பயங்கரம் வரும். இரண்டு இரும்புப் பறவைகள் இரு பெரிய கட்டடங்கள் மீது மோதும். அந்த நாளே மூன்றாவது உலகப் போரின் ஆரம்ப நாளாகும்.

நடைபெறும் மூன்றாவது உலக மகாயுத்தத்தில், புதிய இரசாயன ஆயுதங்கள், விஷக் கிருமிகள் பரவுதல் எனப் பல பயங்கரங்கள் நடக்கும். உலகின் இரு பெரிய வல்லரசுகள் இந்த யுத்தத்தில் ஒன்றாகச் சேர்ந்து கொள்வதுதான் ஆச்சரியமாகும்.

இந்தப் போரில் இத்தாலி, ஸ்பெயின், இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் எனப் பல நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் குதிக்கும். இந்த உலக மகா யுத்தத்தில் சீனாவின் பங்கு மிக அதிகமாக இருக்கும். பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் முற்றுகையிடப்பட்டு நவீன லேஸர் கருவிகள் மூலம் அந்த நகரின் பெரும்பகுதி அழிவுக்குள்ளாகும். இந்தியா நடுநிலையாக நின்று இந்தப் போரை நிறுத்தப் பேச்சுக்கள் மேற்கொள்ளும். ஆனால் அதன் சமாதானப் பேச்சு எடுபடாமற்போகும்.

சில நாடுகளைச் சேர்ந்த ஏழு பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இந்தக் குழு சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் போது நிலைமை இன்னும் மோசமடையும். சமாதான முயற்சிகளில் ஈடுபடும் இந்தக் குழுவின் 7 உறுப்பினர்களில ஒருவர் கொடூரமாகக் கொல்லப்படுவதே போர் தீவிரமடைவதற்குக் காரணமாகும்.

இந்தப் போரின் விளைவுகளைச் சந்திக்காத நாடே இருக்காது. உலகெங்கும் பசி, பட்டினி, பஞ்சம் என்பன தலைவிரித்தாடும் நிலை வரும். உலகில் பெரும்பாலானவர்கள் மண்ணில் புதையுண்டு மாண்டு போவார்கள்.

அரபு நாட்டின் போர்ப் படைத் தலைவர் ஒருவர், அவர் இருக்கும் தலைநகரில் வைத்தே கொல்லப்படுவார். அவர் கொல்லப்படுவதுடன் மூன்றாம் உலகப் போர் முடிவுக்கு வரும். கடைசி யுத்தம் இந்தியாவின் கங்கைக் கரையோரமாக முடிவடையும். உலகம் முழுவதும் இரத்தக் களரியாகும்.

இந்த நேரத்தில் புனித போப்பாண்டவர் பற்றிய ஒரு துயரத்தையும் மக்கள் சந்திக்க நேரிடும்.

- இவ்வாறு நாஸ்டர்டாம்ஸ் கூறியுள்ளார்.

இவரது கூற்றுக்கள் அமெரிக்காவில் தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்களுடன் பெரிதும்ஒத்துப் போகின்றன.

அமெரிக்கா மூன்றாம் உலக மகா யுத்தத்தை ஆரம்பிக்குமா என்பதே இப்போது உள்ள கேள்வி. (ம)

### கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்

# கணனித்தரவுப்பதிவு இயக்குநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு — கிழக்கு மாகாணப்பொதுச்சேவை ஆணைக்குழு, கணனித்தரவுப் பதிவு இயக்குநர் மற்றும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் வகுப்பு II பிரிவு 'ஆ' பதவி ஆகிய வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 15 ஆம் திகதியாகும். விண்ணப்பிப்போருக்கான கல்வித்தகைமை மற்றும் பிறதகைமைகள் பற்றிய விவரங்களை யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ்பொட்டில் வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

இந்த விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விவரங்களை 07—09—2001 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம் என மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

(க-7)

# 'சிவதொண்டன்' நிலையத்திற்கு விரைவில் கணனி அச்சகம்

## அஷ்டலக்ஷ்மி வெள்ளி விழாவில் தகவல்

யாழ்ப்பாணம், செப். 21

''ஐம்பது ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'சிவதொண்டன்' சைவசமய மாத சஞ்சிகையை ஊக்குவிக்குமுகமாக ஐந்து லட்சம் ரூபா செலவில் புதிய கணனி அச்சகம் ஒன்றை அடுத்த வருட ஆரம்பத்தில் சிவதொண்டன் நிலையத்திற்கென அமைத்துக்கொடுக்கவுள்ளேன்''.–இவ்வாறு தெரிவித்தார் அஷ்டலக்ஷ்மி நிறுவுநரான குலபதி ஆறுமுகம் கந்தையா.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அஷ்டலக்ஷ்மி நிறுவனத்தின் வெள்ளி விழா மற்றும் நூல் வெளியீட்டுவிழா நிகழ்வுகளின் போது வரவேற்புரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழ் மாணவர்களுக்குரிய அறிவுசார் நூல்கள் வெளிவருவது மிக அவசியமானதெனக் கருதியே கைதடியில் எமது பதிப்பகம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 25 வருடகாலமாக கல்விப்பதிப்புக்களை வெளியிடுவதிலும், ஆன்மீக நூல்களை வெளியிடுவதிலும் எமது பதிப்பகம் முன்னின்று உழைத்து வருகின்றது.


இன்று ஆங்கிலத்தில் வெளியிடப்படும் கணனி நூல் ஒன்று அமெரிக்காவில் வாழ்கின்ற எம்மவரான எஸ். கே குணசீலன் என்பவரால் திறம்பட எழுதப்பட்டுள்ளது. அதேபோல கந்தபுராணத்திற்குரிய பொழிப்புரை நூல், புத்தூர் இலக்கிய வித்தகர் ச. சுப்பிரமணியத்தால் எழுதப்பட்டுள்ளது. இதைவிட திருமதி பா. பாலசிங்கம், சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் ஆகியோரால் ஆக்கப்பட்ட தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையுள்ள சைவநெறி செயல் நூல்கள் ஆகியவற்றை இன்று வெளியிடுகின்றோம். எமது கல்விப்பணி வெள்ளி விழாக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் பல அரிய தமிழ், ஆங்கில நூல்களை வெளியிட இருக்கின்றோம், என்று கூறினார்.

இந்நிகழ்வில் தொடக்கவுரை நிகழ்த்திய இ. மகேந்திரன் பேசுகையில், தமிழ் மாணவர்களின் அறிவுத்தாகத்தை தீர்க்கவல்ல சைவத்தமிழ் நூல்களை வெளியிடும் திருப்பணியில் குலபதி ஆறுமுகம் கந்தையாவின் சேவை மகத்தானது. யாழ். மக்களின் மனதைக்கவர்ந்த கந்தபுராணத்தை பொழிப்புரையோடு வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதாகும். அதைவிட மாணவர்களுக்கான சைவநெறி செயல் நூல்களை அழகாக அச்சிட்டு வெளியிட்டமை பாராட்டுக்குரியது என்று கூறினார்.

இவ்விழாவில் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் ஏ. கே. எட்வேட், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ம. சிவானந்தன் மற்றும் 'தாயகம்' நிறுவுநர் வீ. சிறீதரன் ஆகியோர் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

(க-ரி)

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்!



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 21 |
| 07 | 09 |
| 1978 | 1993 |

## செல்வன் குமாரகுலசிங்கம் சிவகுமாரன்

அன்பின் ஒளிவிளக்கே! அருளின் — திருவுருவே!
மன்பதை வாழ்த்தும் மணிச்சுடரே — என்றென்றும்
நின் அன்புவடிவம் அகலாத த்தை — விட்டு
தன்னிகரில் ஈசனடிசார்க.

உன் பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா,**
**அக்காமார், அண்ணன்,**
**மைத்துனர், மருமக்கள்.**

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(92500)

### வடக்கு - கிழக்கில் பணிபுரிபவர்கள்

# ரயில் பயண 'வாரண்ட்' மூலம் விமானத்தில் செல்ல முடியும்

## மிகுதிக் கட்டணத்தை பணமாக வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் ரயில் பயணத்திற்கான ஆணைச்சீட்டை (வாரண்ட்) பயன்படுத்தி விமானம் மூலமோ, கப்பல் மூலமோ பிரயாணம் செய்யமுடியும்.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று வடக்கு—கிழக்கு மாகாண தலைமைச் செயலாளரினால் சகல திணைக்களங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் ரயில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதம் அடைந்திருப்பதனாலும், சில பகுதிகளுக்கு நேரடி ரயில் போக்குவரத்து இல்லாத காரணத்தினாலும் வடக்கு — கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் அலுவலர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துக் கஷ்டங்களையும், அவர்கள் தமக்கு உரித்துடைய விடுமுறை ரயில் ஆணைச் சீட்டுக்களைப் பயன்படுத்தாமல், தமது சொந்தச் செலவிலேயே பயணங்களை மேற்கொள்வதையும் கவத்திற்கொண்டே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர் அல்லது அவரது குடும்பத்தினர் பிரயாணத்திற்கான கப்பல் கட்டணம் அல்லது விமானக் கட்டணட்தைச் செலுத்துவதற்கு அவர்கள் தமக்குரித்தான முழு விடுமுறை ரயில் ஆணைச்சீட்டை ஒரே தடவையில் பயன்படுத்த முடியும்.

ரயில் ஆணைச் சீட்டின் பெறுமதியிலும் கப்பல் கட்டணம் அல்லது விமானக் கட்டணம் கூடுதலாக இருக்குமாயின், மீதிப்பணத்தை சம்பந்தப்பட்ட அலுவலர் சொந்தப்பணத்திலிருந்து செலுத்த வேண்டும்.

இதேபோன்று, நேரடியாக ரயில் சேவை நடைபெறாத பிரதேசங்களுக்கு போக்குவரத்துச்சபைகளினால் நடத்தப்படும் பஸ்களில் பிரயாணம் மேற்கொள்ளும் அலுவலர்களும் பிரயாணக் கட்டணத்தை பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பெறமுடியும் என அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் ஆணைச்சீட்டைப் பயன்படுத்தி கப்பல் அல்லது விமானம் மூலம் பயணம் மேற்கொள்ளும் அரச அலுவலர் தமது விண்ணப்பத்தை உரிய முறையில் திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(க-182)

# பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை

தென்மராட்சி, செப். 21

பருத்தித்துறை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு புதிய மாடிக் கட்டடம் மந்திகை ஆதார வைத்தியசாலை வளவில் அமைக்கப்படவுள்ளது. கட்டடம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அலுவலகம் மந்திகை ஆதாரவைத்தியசாலை மேல்மாடியில் தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (க-117)

# எழுதுநர்களுக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபை அலுவலகங்களில் ஓய்வூதியப் பணிகளை மேற்கொள்ளும் எழுதுநர்களுக்கான பயிற்சிப் பட்டறை வடக்கு — கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் விரைவில் நடத்தப்படவுள்ளது.

இதற்கு வசதியாக உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களில் ஓய்வூதிய வேலைகளைக் கையாளும் அலுவலர்களின் பெயர் விவரங்களை பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(க-31)

# தொழிற்றிறன் விருத்திப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 21

'முயற்சி' அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திறன் விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான தொழிற்றிறன் விருத்திப் பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச்சமர்ப்பிக்குமாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ. நல்லதம்பி கேட்டுள்ளார். (க-4)

# மகாபொல வைபவம் நாளை

யாழ்ப்பாணம். செப். 21

யாழ். பல்கலைக்கழக 2000/2001 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இந்த வைபவம் நடைபெறும்.

இதுவரைகாலமும் மேற்படி புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தை யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்டச் செயலகமே ஒழுங்கு செய்துநடத்தி வந்தது. இந்த வருடம் முதல் யாழ். பல்கலைக்கழகம் இதனை ஒழுங்கு செய்து நடத்தும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-7)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தவமணி அருட்பிரகாசம்

(இளைப்பாறிய ஆசிரியை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது 'ஆக்லேன்', உடுவிலில் வசித்தவருமாகிய திருமதி தவமணி அருட்பிரகாசம், நேற்று (20-9-2001) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற M. அருட்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி சத்தியவதி சிவஞானம் மற்றும் திரு. A.றோய் றஞ்சன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நா. சிவஞானம் மற்றும் திருமதி R. பத்மினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், திரு. சி. மதிவாணன் (லண்டன்) அவர்களின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்றவர்களான வண. சகோதரி மலர் சின்னையா, சுயேந்திரம் தளையசிங்கம் மற்றும் திருமதி சுவர்ணம் நல்ல நாயகம் (கனடா), திரு. தவராஜா சின்னையா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை, இன்று (21-9-2001) வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு (இலங்கை நேரப்படி) உடுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
C. N. செல்வரட்ணம்
25, ஆக்லேன், உடுவில். உடுவில். (92504)

## சரவணமுத்து பரம்சோதி

அச்சுவேலி தோப்பைச் சேர்ந்தவரும், லண்டனில் வசித்தவருமாகிய சரவணமுத்து பரம்சோதி 18-9-2001 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த செல்வரஞ்சினியின் (லண்டன்) கணவரும், செல்லத்துரை (கனடா), காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர் அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மருமகனும், அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், விக்னேஸ்வரன் (அச்சுவேலி), கணேசன் (லண்டன்), காலஞ்சென்ற தேவன் (லண்டன்) மற்றும் திருமதி தேவி யோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வநேசன், செல்வசெந்தி (லண்டன்), செல்வறமணி (லண்டன்), செல்வதிலகன் (கனடா), செல்வதாரணி (பிரான்ஸ்), செல்வராகினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகபூஷணி ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), யாழினி (கனடா), சுவீந்திரகுமார் (பிரான்ஸ்), கருணாகரன் (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23-09-2001) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

தகவல்:
செ. செல்வநேசன்,
(மைத்துனர்)
கல்லூரி வளாகம்,
அளவெட்டி.

Mrs. S. Paramsothy,
No. 11, Elger Avenue,
Surbiton,
Surrey,
U. K.
T. P. 01-399-6547

(92506)

**உதயன்**

## காவலில் தவமியற்றும் தமிழர்கள்!

மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக விசாரணைகள் இன்றி சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் தொடர்பாகவும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் ஆராய உடனடியாக ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் தலையீடவும் கோரிக்கையை முன்வைக்கவும் அவர் சாலவும் பொருத்தமானவரே.

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக மலையகத்தில் இருந்த சந்திரசேகரன் கைது செய்யப்பட்டு, இதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சுமார் இரண்டு ஆண்டு காலம் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தினால் நிரபராதி என விடுவிக்கப்பட்டார்.

பொருத்தமான காரணம் இன்றி - குற்றவாளியாகக் கணிக்கப்படுவதற்குரிய தவறு ஏதும் செய்யாமலேயே - தடுப்புக் காவலில் மாதக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதன் வேதனையை உணர்ந்தவர் அவர். எனவே அந்த வேதனையால் வாடும் தமிழ் ஜீவன்களுக்காகக் குரல் எழுப்ப மிகவும் பொருத்தமானவர் அவர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், படையினருக்கும், பொலீஸாருக்கும் எல்லைமீறிய-வரையறையற்ற-அதிகாரத்தை வாரி வழங்கி இருக்கின்றது.

ஒவ்வொரு தமிழனையும் புலியாகவே அல்லது பயங்கரவாதியாகவே பார்க்கும் சிருடையினர், இந்த வரையறையற்ற அதிகாரத்தை அவர்களுக்கு எதிராக - போதிய காரணமின்றியே- வெறும் சந்தேகத்தின்பேரில்-பிரயோகிப்பதால் தடுப்புக்காவலில் வாடும் தமிழரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்ற போதிலும் நீண்டகாலம் சிறையில் வாடிய பின்னர் அவர்களில பலர் நிரபராதிகள் எனத தெரிவித்து விடுவிக்கப்படுவதையும் -

இந்த நிலையில் ஆணைக்குழு ஒன்றை நியமித்து, இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டால் பல திடுக்கிடும் உண்மைகளைத் தமிழ்க் கைதிகள் வெளியிடுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதையும் -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எந்த வகையில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதும் கூட அம்பலமாகும் என்பதையும் -

சந்திரசேகரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

1983இல் நடந்த இனக் கலவரங்களுக்கு 18 ஆண்டுகள் கழித்து விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இன்று தமிழர்தம் வாழ்வில் எரியும் பிரச்சினையாக இருக்கும் தடுப்புக் காவல் கைதிகள் விவகாரத்துக்கு - உண்மையைக் கண்டறியும் - ஓர் ஆணைக் குழுவை நியமிக்க பின்னிற்கக் கூடாது.

ஓய்வுபெற்ற - மூத்த - தமிழ் தெரிந்த - நீதியரசர்களைக் கொண்டு இவ்விவகாரத்தை விசாரித்தால் சட்டத்தின் பெயரால் நடத்தப்படும் பல கொடூரங்கள் அம்பலத்திற்கு வரும் என்பது நிச்சயம். அதைச் செய்ய ஜனாதிபதி முன்வரவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் திவ்வியனும்கூட இதே சட்டத்தின் கீழ்த்தான் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார். பல்கலைக்கழகப் படிப்பின் உச்சமான பட்டமளிப்பு விழா இன்னும் இரண்டு வாரங்களில் நடக்கப் போகிறது. அந்த விழாவிலே தனது பட்டத்தைப் பெற முடியாத நிலையில் சிறைக் கதவுகளுக்குப் பின்னால் அவர் தடுப்புக்காவலில்.

நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டு, நீதியான விசாரணைகள் நடக்கும் போது, அவர் விடுவிக்கப்பட்டால், மீண்டும் ஒரு பட்டமளிப்பு விழா அவருக்காக நடக்காது. பட்டமளிப்பு விழாவிலே பட்டம் பெறமுடியாத அபாக்கியத்தையும் இந்தச் சட்டம் அவருக்கு வழங்கப் போகின்றது.

இவ்வாறு குடும்பத்தை, உறவுகளை, பிள்ளைகளை - ஏன் தங்கள் வாழ்க்கையைக் கூட - சிறையில் இழந்து வாடும் எங்கள் இளைஞர்களின் அவலநிலை உலகுக்கு அம்பலமாக வாய்ப்புக் கிட்டுமா?

### வடமராட்சி கிழக்கில் வன்செயல்களில்

# ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு,செப்.21

வடமராட்சி கிழக்கில் மிதிவெடி, குண்டுத் தாக்குதல், ஷெல் வீச்சு ஆகியவற்றினால் ஊனமுற்றவர்களுக்கான உபகரணங்களை வழங்க ஜி.ரி.இசற். நிறுவனம் முன்வந்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை இந்த நிறுவனம், யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஊடாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையிடம் கோரியுள்ளது.

இவ்வாறு வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்றவர்களுக்கு சக்கர வண்டி, கழிவறை நாற்காலி, ஊன்றுகோல், அங்கவீனர்களுக்கான சயிக்கிள், பாலர் கைவண்டி ஆகியவற்றை வழங்க ஜி.ரி.இசற். நிறுவனம் முன்வந்துள்ளது. (க-182)

## இளைஞருக்கு பாராட்டு

வலிகாமம் தெற்கு,செப்21

ஊர் மக்களிடம் பணம் திரட்டி கந்தரோடை மத்தி ஞானவைரவர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்வதில் முன்னின்று உழைத்த இளைஞர் ஒருவரை கந்தரோடைக் கிராம சேவையாளர் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்பன நடைபெற்றன.

இந்த இளைஞரைப் பின்பற்றி ஏனைய இளைஞர்களும் வீண் பொழுது கழிக்காமல் ஆத்மீகப் பணிகளில் அல்லது சமூகப் பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும் என்று கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு பாராட்டுத் தெரிவித்தார்.

மண்டலாபிஷேக கடைசி நாளன்று கந்தரோடையைச் சேர்ந்த இ.ஜெயச்சந்திரன் என்ற இளைஞரை பாராட்டி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதமகுரு க.ஜெயானந்தக் குருக்கள், க.குமாரசாமி ஐயா, ஆறு.திருமுருகன் ஆகியோரும் உரையாற்றினர். (க-152)

## நாட்டு நடப்பு

**உண்டி - X**

உடலது பெருக்கு தென்பாள்
உண்டியை சுருக்கிக் கொள்வாள்
அட இது கிழடோ குமரோ என்ன
அறிந்திடா திருக்க வேண்டி
வடமென கிடந்த தாலிதன்னை
வங்கியில் இட்டு வைப்பாள்
இடையதும் தெரிய வேண்டி
ஈர் மூன்று இஞ்சி விட்டு
உடையதை இறுக்க மாட்டும்
உத்தமியே இது வேண்டும்தானா?

*- விகடகவி.*

### புலிகள் மீதான தடையை உடன் நீக்கி

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு பத்திரிகையாளர் அமைப்பு கோரிக்கை

கொழும்பு,செப்.21

விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கி, வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்களுக்கு சுயாட்சி அதிகாரத்தை வழங்குமாறு 'சமாதானத்திற்கான பத்திரிகையாளர்கள்' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் பெரும்பாலும் அரசசார்பு மற்றும் தனியார் பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த சிங்களப் பத்திரிகையாளர்களே அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியாக தீர்வொன்றைக் காணும் நோக்கில் இந்தப் பத்திரிகையாளர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பதினெட்டுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களைக் கொண்ட இந்த அமைப்பு சமாதான முயற்சிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும், இதன் மூலம் நாட்டில் பேரழிவை ஏற்படுத்திவரும் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணுமாறும் கோரிக்கை விடுத்துள்ளதுடன், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறும் அரசுக்கு கோரிக்கைகளை விடுக்குமாறும் ஏனைய பத்திரிகையாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. (க)

# பட்டம், பதவிகளை விட தன்மானமே முக்கியம்

## ஜி.எல்.பீரிஸ் சொல்கிறார்

கண்டி,செப்.21

பட்டம், பதவிகளைவிட தன்மானமே முக்கியம். பதவிகளைப் பெற்றுக்கொள்வதைவிட தன்மானத்தைப் பாதுகாப்பதே சாலச் சிறந்தது.

இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

கண்டி மல்வத்த பௌத்த பீடத்துக்கு விஜயம் செய்து மகாநாயக்க தேரரைச் சந்தித்துப் பேசியபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - நாடாளுமன்றமே அதியுயர்வான மேன்மைமிகு பீடமாகும். அதை இழிவுபடுத்த நான் விரும்பவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு மக்களுக்கு என்னால் சேவையாற்ற முடியும். அரசியல் கலாசாரம் பற்றிய எனது நிலை மிகவும் ஸ்திரமானது.

அரசியல் அதிகாரம் என்பது மக்களுக்குச் சேவை செய்வதேயாகும். எதையும் செய்துவிட்டு அதிகாரத்தில் இருப்பது எனது கொள்கையல்ல. கடந்தகால நடவடிக்கைகள் பற்றி மட்டும் சிந்திக்காமல் மக்கள் விடுதலை முன்னணியிடம் நல்லநோக்கங்களும் உள்ளன என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். பச்சை, சிவப்பு, நீலம் எனக் கட்சிகளின் நிறங்கள் எதுவாக இருந்தாலும் நாம் நல்லதைச் சரியாகச் செய்யவேண்டும்.

நான் மிகவும் ஆழமாகச் சிந்தித்தே இம்முடிவுக்கு வந்தேன். அமைச்சர் பதவி இல்லாவிட்டாலும் மக்களுக்குச் சேவையாற்றுவதில் எந்தப் பிரச்சினைகளும் எனக்கு இல்லை - என்றார். (க)

## சைவப் புலவர் பட்டப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.21

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இளஞ் சைவப் புலவர், சைவப் புலவர் ஆகிய பட்டப் பரீட்சைகள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பட்டப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது 125, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலோ நேரில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - சைவப் புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.(க-7)

## சீரடி பாபாவின் பிறந்ததின விழா

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமைமுதல் சீரடி பாபாவின் பிறந்ததின விழா நடைபெறவிருக்கின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை வரை, தினமும் காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சீரடி சாயிபாபாவின் சரீர சப்தக படனம் அங்கு இடம்பெறும்.

சீரடி பாபாவின் பிறந்த தினமான எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் நாராயணசேவையுடன் விழா நிறைவுபெறும். (ஐ)

## மீனவர்களுக்கு உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கு,செப்.21

வடமராட்சி கிழக்கில் உள்ள மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களை வழங்க பட்டினிக்கு எதிரான இயக்கம் முன்வந்துள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களினால் தெரிவுசெய்யப்பட்ட 70 மீனவர்களுக்கு முதற்கட்டமாக உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (க-182)

## நாளை

புரட்டாதி 06
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
முற்பகல் 8.14 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
வைகறை 5.53 வரை
ஷஷ்டி விரதநாள்
சுபநேரம் : 3.02 - 4.32,
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறிவாளிகளின் சிறந்த பண்பு மௌனம். இயல்பாய் வருவது பேச்சு; அறிவால் வருவது மௌனம்.

# புழக்கத்திலுள்ள பழமொழிகளை நூல் வடிவில் வெளியிட ஏற்பாடு

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருக்கும் பழமொழிகள் நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதற்கான சகல ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம் அறிவித்துள்ளார்.

மேற்படி பழமொழிகளை ஒன்று திரட்டும் நடவடிக்கைகளில் பிரதேச செயலங்களில் கடமையாற்றிவரும் கலாசார உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் -

இது தொடர்பான சுற்றறிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

பழமொழிகளைச் சேகரிக்கும் போது ஒவ்வொரு பிரதேசங்களிலும் வாழும் முதியவர்களின் ஒத்துழைப்புப் பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-7)

### பயணிகள் உணவு உட்கொள்ள

# ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் விமானங்களில் இனி 'பிளாஸ்ரிக்' கத்தி, கரண்டிகள்!

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானங்களில் இனிமேல் உணவு உட்கொள்ள 'பிளாஸ்ரிக்' கத்தி, கரண்டி வகைகளே பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மீதான விமானத் தாக்குதலின் போது, பயணிகள் விமானங்களைக் கடத்தியவர்கள் விமானத்தில் உள்ள உணவு உட்கொள்ளப் பயன்படுத்தப்படும் உலோகக் கத்தி மற்றும் முள்ளுக்கரண்டிகளையே பயன்படுத்தியிருந்தனர்.

அதையடுத்தே ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் விமானங்களிலும் எமிரேட்ஸ் விமானங்களிலும் 'பிளாஸ்ரிக்' கத்தி மற்றும் கரண்டி வகைகளைப் பயன்படுத்தப் போவதாக எமிரேட்ஸ் ஏயார் லைன்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தற்போது ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் 40 வீதத்துக்கு மேற்பட்ட பங்கைக் கொள்வனவு செய்துள்ள எமிரேட்ஸ் விமான நிறுவனமே ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமான நிறுவனத்தையும் நிர்வகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.(க)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



மானிப்பாய் பிரதேச சபையின் அனுசரணையுடன்
யாழ்.மாவட்டத்துக்கான
கராத்தே வெற்றிக் கிண்ணப் போட்டிக்கான
**கூட்டம்**

காலம்:- 23-09-2001 11.00 மணி *(S.L.T)*
இடம்:- **யாழ்.மத்திய கல்லூரி**

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கராத்தேக் கழகங்களையும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

*போட்டியை வழிநடத்துபவர்:*
**- P.ராஜன் மாஸ்ரர்.**

(92247)

---

உ
குகமயம்

## பொன்னாடை போர்த்து பட்டமளிப்பு விழா

**அன்புடையீர்!**

இன்று (21-09-2001) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் உடுப்பிட்டி, இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய கும்பாபிஷேகத்தை பிரதான குருவாக இருந்து வெகுசிறப்பாக நடத்தி வைத்தவரான பிரதமகுரு **பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவக் குருக்கள்** அவர்களுக்கும் மற்றும்

பிரம்மஸ்ரீ கி.நாராயணக்குருக்கள் - *யாழ்ப்பாணம்*
பிரம்மஸ்ரீ கி.வைத்தீஸ்வரக்குருக்கள் - *வீல்லூன்றி*
பிரம்மஸ்ரீ செ.ரவிச்சந்திரக்குருக்கள் - *அளவெட்டி*
பிரம்மஸ்ரீ கு.சரவணபவக்குருக்கள் - *இணுவில்*

ஆகியோருக்கும் மேற்படி ஆலயத்தில் வைத்துப் பொன்னாடை போர்க்கப்பட்டு, "கிரியா கலாபமணி" என்னும் சிறப்புப் பட்டமும் பரிபாலன சபையினராலும் பொதுமக்களாலும் மனமுவந்து வழங்கப்படவிருக்கிறது.

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(92417) ஆலய பரிபாலன சபை.

---

## சூடை மீனுக்கு வந்த மவுசு!

குருநகர்,செப்.21

சின்னக்கடை பொதுச் சந்தையில் கடந்த புதன்கிழமை மீன் விலை உயர்வாகக் காணப்பட்டது. மிகவும் சொற்ப அளவு மீனே சந்தைக்கு மீனவர்களால் எடுத்துவரப்பட்டது.

வழமையாகக் கிலோ 20ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவரும் சூடை மீன் அன்றைய தினம் கிலோ 80ரூபாக விற்பனையானது. (க-51)

## அரியாலையில் பல நோ.கூ.சங்க கிளை திறப்பு

அரியாலை,செப்.21

யாழ்.பல நோ.கூட்டுறவுச் சங்கம் அரியாலையில் உள்ள 19ஆம் இலகக் கிளையை மீண்டும் அதே இடத்தில் திறந்துள்ளது.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் வசதிகருதியே மேற்படி கிளை திறக்கப்பட்டுள்ளது. (க-17)

## உணவு முத்திரை விநியோகம்

அரியாலை,செப்.21

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு முத்திரை விநியோகிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இந்த உலர் உணவு முத்திரைகள் கிராம சேவையாளர் ஊடாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

(க-17)

---

## வாழ்த்தி வரவேற்கின்றோம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரிவின், 2001ஆம் ஆண்டின் புதிய செயற்குழுவிற்காகப் போட்டி இன்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்ட

*கௌரவ தலைவர்:* **திரு.ஆறுமுகம் சபாநாதன்**
(சிரேஷ்ட கிராம அலுவலர், வேலணை)

*கௌரவ உபதலைவர்:* **திரு.கந்தையா சரவணநாதன்**
(அஞ்சல் அதிபர், வேலணை)

*கௌரவ செயலாளர்:* **திரு.இளையதம்பி சற்குருநாதன்**
(விசகடி வைத்திய நிபுணர்)

*கௌரவ பொருளாளர்:* **திரு.தம்பிராசா தவராசா**
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகம்)

*கௌரவ செயற்குழு உறுப்பினர்கள்:*
**திரு.குமாரசாமி சந்திரா** (கிராம அலுவலர்,புங்குடுதீவு)
**திரு.பசுபதி விநாயகமூர்த்தி** (கிராம அலுவலர்,புங்குடுதீவு)
**திரு.சபாபதி சிவரத்தினம்** (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
**திரு.தர்மலிங்கம் இராசரத்தினம்** (பணிப்பாளர், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி)

*உள்ளகக் கணக்காய்வாளர்:* **திரு.நடராசா சசீகரன்**
(பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கம்,வேலணை)

**ஆகியோரை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.**

வேலணை துறையூர்
கடற்றொழில் கூட்டுறவுச்சங்கம்,
(92494) வேலணை ஐயனார் சனசமூக நிலையம்.

---

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம்.

2001.09.23

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக எல்லையுள் இயங்கும் ப.நோ.கூ. சங்கங்களின் துணைவிதி 23 இன்கீழ் வட - கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளருக்குரித்தாக்கப்பட்டும், இலங்கை ஜனநாயக சோசலிஷசக் குடியரசின் 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 2001.09.23 ஆந் திகதி நடைபெறும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கெனவே அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பொது அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலதி விவரங்களுக்கு இவற்றைப் பார்வையிடவும்.

கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின்படி சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமைகளை நடைமுறைப்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தினை ஜனநாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன.

செ.கு.சண்முகநாதன்.
கூ.அ.உ..ஆணையாளர்,
(C/18332) யாழ்.மாவட்டம்.

---

# போலியோ
# நோயை முற்றாக ஒழிப்போம்

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில்
## தேசிய போலியோ தடுப்பு மருந்தேற்றல் இயக்கம்

**2001 செப்ரெம்பர் 22 சனிக்கிழமை**
**2001 ஒக்ரோபர் 20 சனிக்கிழமை**
**இரு தினங்களிலும்**



ஐந்து வயதுக்குட்பட்ட உங்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்தூட்டுங்கள்.

**முன்னர் தடுப்பு மருந்து கொடுத்திருந்தாலும் இம்முறையும் *கட்டாயம்* கொடுங்கள்.**

விவரங்களுக்கு உங்கள் பகுதிக் குடும்ப சுகாதார சேவையாளரை அல்லது சுகாதார சேவை உத்தியோகத்தரை விசாரியுங்கள்!

(C/18326)

---

நெஞ்சமதை விட்டகலா
## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 07 - 09 - 1934



மறைவு 20 - 09 - 1993

## அமரர் E.K.ஆறுமுகம்

*(முன்னாள் பஸ்நடத்துநர் ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறைச்சாலை வடபிராந்திய போக்குவரத்துச் சபை)*

திதி:- பூர்வபக்க பஞ்சமி 21.09.2001

தென்னையின் இளநீர் போல....
தென்றலின் இனிமை போல....
இதமாக நீங்கள் பேசும்
தொனியின்றும் காதில் கேட்க....
உமையிழந்து எட்டாண்டுகள்
ஓடியே மறைந்ததுவோ!
அன்போடு எமைத் தாங்கி....
இதமோடு காத்த உம்மை
இழந்ததால் தினமும் நாங்கள் ஆறாத்துயரம் கொண்டுள்ளோம்.
இந்த உலகம் உள்ளவரை அன்புடன்
என்றென்றும் நினைவு கூருவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*புதுவீடு,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.* (92411)

மனைவி, மக்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

# மறவாதார் மனதிலே எழுந்தருளி வல்வினைகள் வாராமல் காப்பவன் சனி

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான புரட்டாதிச் சனிக்கிழமை விரதம் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது. அதனை ஒட்டிய ஒரு கட்டுரை இன்றைய 'ஞானக்கதிர்' பகுதியில் பிரசுரமாகின்றது.

புரட்டாதி மாதத்தில் புரட்டாதிச் சனிக்கிழமை விரதமும், நவராத்திரி விரதமும் மிகக் கூடுதலான சைவ மக்களால் பக்தியோடும் சிரத்தையுடனும் கைக்கொள்ளப்படும் விரதங்களாகும். புரட்டாதிச் சனிக்கிழமை, வார விரதங்களில் ஒன்றாக விளங்குகிறது. நவக்கிரகங்கள் தங்கள் சக்தியினால் மக்களுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. அவற்றின் சுழற்சியினால் நன்மையான பலன்களும் துன்பகரமான பலன்களும் ஏற்படுகின்றன. கிரகங்கள் எல்லாம் தங்களுக்கு வெவ்வேறு தெய்வங்களை அதி தேவதைகளாகக்கொண்டுள்ளன. ஒரு கிரகம் ஒருவருக்குத் துன்பத்தை ஏற்படுத்தினால் அதற்குரிய அதி தேவதைகளை வணங்கி நிவர்த்தி பெறலாம். எனவே சிவாலயங்களிலும், விஷ்ணு கோயில்களிலும் நவக்கிரக சந்நிதிகள் இருப்பதைக் காணலாம். நமது நாட்டிலே நவக்கிரகங்களுக்குத் தனித்தனிக் கோயில்கள் கிடையாது. ஆனால் பாரத நாட்டிலே கும்பகோணத்துக்கு அருகிலே மிக மகிமைவாய்ந்த சூரியனார் கோயில் இருக்கிறது. இங்கு சூரிய பகவான் மையமாக அமைய ஏனைய கிரகங்கள் சூரிய பகவானைச் சுற்றி உரிய இடங்களில் இருக்கின்றன.

ஈஸ்வரன் என்ற சிறப்புக்குரியவர் சனி பகவான். அசுப கிரகங்களில் ஒன்றாக இருந்தாலும் பக்தியினாலும், விடா முயற்சியினாலும் காசியில் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்துக் கடும் தவம் செய்து, சிவபெருமானிடம் நவக்கிரகங்களில் ஒன்றாக இருக்கும்பேறும் ஈஸ்வரன் என்ற பெயரும்பெற்று மகிழ்ந்தார். சனீஸ்வரன் நவக்கிரக சந்நிதிகளிலும் தனியாகச் சிவன் கோயில்களில் ஒரு சந்நிதியிலும் எழுந்தருளியிருப்பவர். சாதாரணமாக மக்கள் அட்டமத்தில் சனீஸ்வரன் சஞ்சாரம் செய்யும்பொழுதும், ஏழரைச்சனி நடைபெறுங்காலத்திலும், சனி மகாதிசை இடம்பெறும்பொழுதும் மனங் கலங்கி தங்களுக்கு என்ன நடக்குமோ தெரியாது? என அஞ்சுகின்றனர். உலக வழக்கிலே சனியைப்போல கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை எனக் கூறப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆகவே கிரகங்களுக்குரிய அதி தேவதைகளை வணங்குவதாலும், விரதங்களை அனுஷ்டிப்பதனாலும் தான தர்மங்கள் செய்வதன் மூலமும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம்.

சனிபகவான் கரிய நிறமுடையவர், கால் முடமானவர், பல நற்குணங்கள் அமைந்த காகத்தை வாகனமாக உடையவர். சனீஸ்வரன் தனக்குச் சொந்தமான மகர, கும்ப ராசிகளில் பிரவேசிக்கும் பொழுதும் உச்சமாகிய துலாராசியில் பிரவேசிக்கும் பொழுதும் விசேட வழிபாடு செய்வதன் மூலம் நீண்ட ஆயுள், சுகவாழ்வு, வலிமை, இன்பம், புகழ், நல்ல ஆரோக்கியம் என்பவற்றைப் பெறலாம்.

சனிபகவானால் துன்பப்பட்டவர்கள், காடேகி வாழ்ந்தவர்கள், பொன் பொருள் செல்வமெல்லாம் இழந்து வருந்தியவர்கள் பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. திரௌபதையின் துகில் உரியப்பட்டதும், சீதை இராவணனால் கவரப்பட்டதும், பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்ந்ததும், சனிபகவான் பொருத்தமற்ற ராசிகளில் சஞ்சாரம் செய்யும் காலத்தில் என்றால் மிகையில்லை. தலயாத்திரை, தீர்த்தயாத்திரை செயவதன் மூலமும், சனீஸ்வர பகவானுக்கு விசேட வழிபாடு புரட்டாதிச் சனிக்கிழமைகளில் செய்வதன் மூலமும் தோஷ நிவர்த்திபெற முடியும். பொதுவாக எல்லா விரதங்களுக்கும் சொல்லப்பட்ட நியதிகள் இவ்விரதத்துக்குமுண்டு. ஆனால் நல்லெண்ணை வைத்து நீராடி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்பது புரட்டாசிச் சனிக்கிழமை விரதத்துக்கு ஒரு நியதியாகும். ஆசார சீலர்களாக கருநீலப் புஷ்பங்களைச் சாத்தி, திலதீபமேற்றி, தில அன்னம் (எள்சாதம்)நிவேதித்து, கருநீல ஆடைகளால் சனி பகவானை அலங்காரம் செய்து வழிபடுவது மிகவும் சிறந்தது.

நிடதநாட்டு மன்னன் நளமகாரசன் ஒருதினம் அந்திப் பொழுதில் சந்நியாவந்தனம் செய்வதற்கு கைகால் சுத்தம் செய்யும் பொழுது குதிக்காலில் ஒரு பகுதி நனையாதிருந்த காரணத்தால் ஆசாரம் குறைந்துவிட்டது எனக்கருதி சனீஸ்வரன், நளனுக்குப் பல துன்பங்களைக் கொடுத்தான். புட்கடனோடு சுதாட வைத்து நாடிழந்து, காரிகை தமயந்தியை கானகத்தில் கைவிட்டு, கார்க்கோடகன் என்ற பாம்பால் கடியுண்டு தோற்றம் மாறி, இருதுபர்ண மகாராஜனுக்கு குதிரைச் சேவகனாய் அமர்ந்து மிகவும் துன்பப்பட்டான். தமயந்தியும் கணவனைப் பிரிந்து தன்னை விழுங்க முயன்ற மலைப்பாம்பின் பிடியிலிருந்து தப்பி சிலர் உதவியுடன் சுவாகுகன் நகரம்

### ஞானக்கதிர்

சென்றடைந்தாள். நளனைக் காணும் வரை கூந்தலை முடியாது, நீராடாது, ஆடை மாற்றாது, பூச்சூடாது, மஞ்சள் - குங்குமம் தரியாது, சோகமே உருவாக உறுதியுடன் வாழ்ந்தாள். இறுதியாக விதர்ப்ப நாட்டு மன்னன் மேற்கொண்ட பெருமுயற்சியால் தமயந்தி கணவனையும் பிள்ளைகளையும் மீண்டும் அடைந்தாள். பழமை போல நளன் ஆட்சிசெய்து வாழ்ந்தாலும் சனீஸ்வரனுடைய தாக்கத்திற்கு உள்ளான நளமகாராஜன் சித்தப்பிரமை பிடித்தவன்போல மனைவி மக்களை வெறுத்து சோமபலூற்று மனமகிழ்ச்சியின்றிக் காணப்பட்டான். நாரத முனிவர் நளனிடம் வந்து இது சனி பகவான் செயலே என்றும், தலயாத் திரை, தீர்த்த யாத திரை செய்தால் மட்டுமே நற்பலன் கிடைக்கும் எனக் கூறி நல்ல ஆலோசனைகளையும் வழங்கினார். நளமகாராஜா மனைவி, மக்களுடன் பல தலங்களையும் வழி பட்டு, வரும்பொழுது பரத்துவாச முனிவரைச் சந்திக்க நேர்ந்தது. முனிவர் நளனது நிலையையுணர்ந்து தர்ப்பாரண்ணேஸ்வரம் எனப்படும் திருநள்ளாறு சென்று தீர்த்தமாடி வழிபாடு செய்தால் குறை எல்லாம் தீரும் எனக் கூறி விடைபெற்றுச் சென்றார். நளமகாராஜா திருநள்ளாறு சென்று புனிதமான பிரமதீர்த்தத்தில் நீராடி கோபுரவாயிற் புகும்போது சனி பகவான் சிவனுக்கஞ்சி நளனை விட்டகன்று அருகில் உள்ள ஒரு மாடப்பியையில் அமர்ந்தான். நளன் மனம்மிக மகிழ்ந்து தர்ப்பாரணயேசுவரப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை செய்வித்து, அருந்தமிழ்ப் பாமாலைகள் பாடி வணங்க, இறைவன் நளன் முன் காட்சியளித்து அவன் விரும்பிய வரங்களை அருளி மறைந்தான். அன்று முதல் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுக்கும் நளனுடைய நாமம் சூட்டப்பெற்றது. திருநள்ளாறு செல்லும் அடியவர்கள் சனீஸ்வர பகவானுடைய கெட்ட பார்வையினின்று நீங்கி இன்பவமடைவர் என்பது திண்ணம். இன்றும் அடியவர்கள் சனிக்கிழமைகளில் 'சனி நீராடு' என்ற வாக்கியத்திற்கு ஏற்ப நல்லெண்ணை தேய்த்து நீராடி எள் தீபம் ஏற்றி வணங்குவதைக் காணலாம்.

மேலும் சிவபெருமான் சனிபகவானை உள்ளே அழைக்க சனீஸ்வரன் வந்து அஞ்சி நின்று வணங்க, "நளனோடு வந்தனையோ உன் பொருட்டு நளன் அநேக வரங்களைப் பெற்றான். அதன்படி இத் தலத்தில் இருந்து வருகின்றவர்கட்கு யாதொரு இடுக்கண்ணும் செய்யாது அருள் புரிந்துகொண்டு இருப்பாய்" என அருள்பாலித்தார். சனிபகவானும் இறைவனுடைய ஆகஞையை சிரமேற்கொண்டு முன்பு போல அம்மாடப் பிறையில் காக வாகனத்தமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றான். சனிபகவான் தேவாதிதேவர் தொழும் தெய்வமாக, சார்ந்தாரை எப்பொழுதும் காப்பவனாக, புண்ணியங்கள் தழைத்தோங்கச் செய்பவனாக, வல்வினைகள் வராமல் காப்பவனாக விளங்கி மறவாதார் மனதிலே எழுந்தருளி அடியார்களை என்றும் காத்தருளி, உலகமெல்லாம் செழித்தோங்கச் செய்துவரும் ஒருவராக விளங்குவதைக் காணலாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தனது உள்ளத்தல் இறைவன் புகுநத காரணத்தால் நாளும் கோளும நல்லனவே செய்வன அல்லன் செய்யாதென ஆணையிட்டு கோளறு பதிகத்தில் பாடியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. ஆகவே சனிக்கிழமை விரதத்தை ஆரம்பித்து பிரதி சனிக்கிழமைதோறும் கைக்கொள்ள விரும்புபவர்கள் புரட்டாதிச் சனிக்கிழமையிலே முறையாக ஆரம்பித்தல் நன்று. எல்லாவற்றுக்கும் மேலாக விரத தினங்களில் மௌன விரதத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் சிறந்தது. மோனம் என்பது ஞான வரம்பு. தாயுமானவர், இராம கிருஷ்ண பரமஹம்சர், ரமணமகரிஷி, காந்தியடிகள் ஆகியோர் மௌன விரதம்மூலம் உயர்நிலை அடைந்தனர்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

# மூன்றாம் தவணைப் பரீட்சை கல்வி வலயத்தால் நடத்தப்படும்

வலிகாமம் தெற்கு,செப்.21

வலிகாமம் கல்வி வலயத்தில நடைபெறவுள்ள இவ்வருடத்துக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகள் யாவும் வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்படவுள்ளன.

தரம் மூன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கே பரீட்சைகள் நடத்தப்படும்.

11ஆம ஆண்டுக்கான பரீட்சைகள நவம்பர் மாதம் முதல் வாரத்திலும்-

3ஆம் தரம் தொடக்கம் 10ஆம் தரம் வரையான பரீட்சைகள் நவம்பர் மாத இறுதி வாரத்திலும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பரீட்சை முறையில், கணிப்பீட்டு முறைகள் பின்பற்றப்பட்டாலும் இறுதித் தவணைப் பரீட்சையைப் பொதுப் பரீட்சையாக நடத்த வலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் எண்ணிக்கையை வகுப்பு ரீதியாக அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயத் திணைக்களம கேட்டுள்ளது. (க-152)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினரால் 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இளம் கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் முகமாக நடத்தப்படும் இந்தப் போட்டியில், பங்குபற்ற விரும்பும் அணியினர் நுழைவுக் கூப்பனை பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மலேரியாக் குடம்பியை ஒழிக்க ஏற்பாடு

வடமராட்சி கிழக்கு,செப்.21

வடமராட்சி கிழக்கில் உள்ள கிணறுகள், குளங்கள் போன்ற நன்னீர் நிலைகளில் மலேரியாக் குடம்பியை ஒழிக்கும் முகமாக அவற்றுக்குள் மீன் குஞ்சுகள் கொண்டுவரப்பட்டு விடப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு மலேரியா கட்டுப்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் சுகாதாரத் திணைக்களம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (க-182)

# தெய்வீக ஸ்தலங்களில்



ஆனைக்கோட்டை, உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 8ஆம் திகதி கொண்டாடப் பட்டது. விழா முடிவில் இடம்பெற்ற திருச்சொருப தேர்ப்பவனியில் அடைக்கல அன்னை எழுந்தருளிவரும் காட்சி. (ஐ)



சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் நான்காவது சைவ மாநாடு கடந்த ஓகஸ்ட் 18ஆம், 19ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. ஓகஸ்ட் 18ஆம் திகதி லண்டன் விம்பிள்டன் பிள்ளையார் கோயிலிலும், 19ஆம் திகதி லண்டன் ஈலிங் கனக துர்கை அம்மன் கோயிலிலும் மாநாடு சிறப்பாக நடந்தது. இலங்கை, இந்தியாவிலிருந்து பல பெரியார்கள் பங்குபற்றினார்கள்.

ஓகஸ்ட் 19ஆம் திகதி நடைபெற்ற சைவ மாநாட்டுக்குத் தலைமைவகித்த பேரூர் ஆதினம் தவத்திரு. தவலிங்க சுவாமிகள், பிரம்மஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களுக்கு 'வேதாகம வித்தகர்' என்னும் பட்டம் வழங்கி, தங்கப்பதக்கம் அணிந்து, பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் மஹோற்சவ காலங்களில் 'பிள்ளையார் பெருமை' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய பிரசங்க பூஷணம் ந.சிவசண்முகமூர்த்தியைப் பாராட்டி நடைபெற்ற விழாவில் 'செஞ்சொற்செல்வர்' 'பிரசங்க நாவலர்' ஆறு.திருமுருகன் பிரசங்க பூஷணத்தைப் பாராட்டி, பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் இனுவில் கலாநிதி தா.அமிர்தலிங்கம் பாராட்டுரை வழங்குவதையும் படத்தில் காணலாம். (ஐ)



சங்கானை கப்பண்டா வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான கட்டட அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோக நாதன் கட்டடத்திற்கான அடிக்கல்லை தேவஸ்தான குருக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ்.வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில் இல.22A, வெள்ளாந்தெரு என்னும் முகவரியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: S.இரத்தினம், இல.201, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 2113 (92438)

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் உடுவில் - மானிப்பாய் வீதியில் 4 3/4 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட விசாலமான புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Mrs.R.P.Chelliah, Elephant villa, Uduvil, Chunnakam. (92455)

## காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் டச் வீதியில் கிணற்றுடன பனை, தென்னை, மா, இலுப்பை மரங்களைக் கொண்ட 14 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Mrs.R.P. Chelliah, Elephant villa, Uduvil, Chunnakam. (92454)

## திருமண சேவை

எம்மிடம் சகலவிதமான மணமக்களும் உள்ளனர். செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். கமலக் கண்ணன் திருமண சேவை, இல. 770, நல்லூர், யாழ்ப்பாணம். (92480)

1965ஆம் ஆண்டு பூரட்டாதி நட்சத்திரம் வைத்தியராகப் பணிபுரியும மணமகனுக்கு பொருத்தமான மணப்பெண் தேவை. A/L படித்திருந்தால் போதும் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும் துர்க்கா திருமண சேவை, 178,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (92502)

## இலகு திருமண சேவை

1971 அச்சுவினி உதயச் செவ்வாய படித்த மணமகளுக்கு அரச, தனியார் மணமகளும், 1971 மிருகசீரிடம், செவ்4, U.K.மணமகனுக்கு U.K மணப்பெண்ணும் தேவை. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (92368)

## விற்பனைக்கு

புதிய PENTIUM 3 கணனி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.T.ரகு, லோட்டன் றோட், மானிப்பாய். T.P. 2979 (92476)

புலோலி மெதடிஸ்மிசன் பாடசாலைக்கு மேற்குப் புறமாக உள்ள தோட்ட நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு சு.செல்வராஜன், கொடிகாமம் வீதி, புலோலி. (92497)

பகிறா இன (தரம் 1) புறொயிலர் குஞ்சுகளும் (கை செக்ஸ்) சிகப்பு பேட்டுக் குஞ்சுகளும் இன்று பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: வி.குணபாகன், இல.1014, நாச்சிமார் கோயிலடி, (பெரியபுலம் படசாலை முன்பாகவும்); இல.04,கொழும்புத்துறை வீதி, சுண்டுகுளி (சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகிலும்) முகவரிகளிலும் பெற்றுக் கொள்ளலாம். T.P.3353. (92505)

## கலாசார உத்தியோகத்தருக்கு அலுவலகப் பை

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களுக்கு கடமை நிமித்தம் பயன்படுத்துவற்கென அலுவலகப் பை வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கடமை நிமித்தம் திருகோணமலைக்கு வரும்போது தமக்குரிய அலுவலகப் பையைப் பெற்றுக்கொள்ளலாம் என வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம அறிவித்துள்ளார். (க-7)

## ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கக் கோரிக்கை

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்று, இதுவரை ஆயவுக் கட்டுரைக்கான தலைப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்களை உடன் பெற்றுக்கொள்ளுமாறும் -

ஆய்வுக் கட்டுரைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

சைவ பரிபால சபையின் பரீட்சைச் செயலாளர் அறிவித்துள்ளார்.(க-7)

---

## இறைபக்தர்களின் குறை போக்கிய டிவைன் ஆச்சிரமம்

### சாலக்குடி, இந்தியா

திரு. இ. அ. துரைரெட்டினம் ஆகிய நான் 20-01-2001இல் கடுமையான இதய வருத்தத்துக்கு உள்ளாகி, யாழ். மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு அறையில் வைக்கப்பட்டு, ஓரளவு குணம் பெற்றேன். ஆனால் என் மனம் மிகவும் உடைந்த நிலையில் இருந்தது. வெளிநாட்டில் உள்ள எனது பிள்ளைகளின் வேண்டுகோளின் பெயரில் சிகிச்சைக்காக இந்தியா சென்றேன். போகும் போது எனக்கு டிவையின் சென்ரர் ஆச்சிரமத்தின் இறைதியான இல்லத்தைப் பற்றிப் பலரும் சாட்சியம் பகர்ந்தார்கள். இந்தச் சாட்சிகளின் வேண்டுகோளின் பெயரில் நானும் என் குடும்பமும் இந்தியாவில் சாலக்குடி என்னுமிடத்திலுள்ள டிவைன் சென்ரர் ஆச்சிரமத்துக்குச் சென்றோம். ஒருகிழமை அங்கு தங்கி தியான இல்லத்தில், விசுவாசம், நம்பிக்கையோடு ஜெபித்தோம். அங்கு வழிகாட்டிகள் எமக்கு இறை அனுபவத்தை அள்ளித் தந்தார்கள்.

"ஆண்டவர் என்னைத் தொட்டதை" உணர்ந்தேன். ஆண்டவரின வார்த்தையால் குணம் பெற்றேன். அதன் பின்பு சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றபோது எனது இதயவருத்தம் மிகவும் குறைவாக உள்ளதை அறிந்தேன். "நான் ஆண்டவனின் வார்த்தையால் குணம் பெற்றேன்." அத்தோடு ஒன்ரரை வருடமாக எனது மனதுகுள் இருந்த கவலை தந்த சம்பவமும் நீங்கிச் சந்தோசம் அடைந்தேன்.

"நான் கடவுளின் பெருமையைக் கண்டேன்." இதை மற்றவர்களும் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் சாட்சியம் பகிர்கிறேன்.

தகவல்:
திரு. இ. அ. துரைரெட்டினம்
(திருமதி து. லில்லி மேரி ஆன்)
குடும்பத்தினர்.

145/8, கதீற்ரல் வீதி,
யாழ்ப்பாணம். (92498)

---

## நெஞ்சைவிட்டு நீங்காத 21ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 09 - 10 - 1925



மறைவு 14 - 10 - 1980

### அமரர் அம்பலவாணர் நடராஜா

திதி: பூர்வபக்க பஞ்சமி 21.09.2001

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிள்ளையார், முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.*

*இடைக்குறிச்சி, வரணி* (92507) - குடும்பத்தினர்.

---

## எழுதுவினைஞர்/கூட்டுறவுப் பரிசோதகர்

### பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு

பிரிவு II ஆரம்பம்: 22-09-2001 (பி.ப.2.00 மணி)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

*ஆசிரியர்: அ.குமாரவேல்* (92502)

---

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

யாழ்நகரில் உள்ள முன்னணி கம்பனி ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் தரத்தில் முன் அனுபவம் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. தனியார்துறை அல்லது அரசதுறையில், விண்ணப்பிக்கும் தரத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன், ஆங்கிலத்தில் தொடர்பாடல் திறமை அவசியம்.

விளம்பர இல. 1366, மே/பா உதயன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 29-09-2001 (92508)

---

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/இராமநாதன் கல்லூரி
### யா/உடுவில் மகளிர் கல்லூரி

ஆகிய இரு கல்லூரிகளினதும் கட்டடப் புனரமைப்புக்கு பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அந்நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை உடன் வழங்கி உதவியவர்களான



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்

**திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம அமைப்பாளருமான

**கௌரவ கா.வே.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர்

**திரு.கே.கமலசேகரன் (பாபு)**

அவர்களையும்

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
யா/உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.

(C/18337)

---

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### 8ஆம் ஆண்டு

மண்ணில் 25 - 03 - 1926



விண்ணில் 25 - 09 - 1993

### அமரர் மகாதேவன் சோமசுந்தரம்

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், ஏற்றுமதி இறக்குமதி திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், சிலோன் பிறின்டேர்ஸ் லிமிட்டெட்)*

திதி:26-09-2001

### 31ஆம் நாள்

மண்ணில் 23 - 01 - 1932



விண்ணில் 22 - 08 - 2001

### திருமதி விஜயாம்பாள் மகாதேவன் சோமசுந்தரம்

என்றும் எங்கள் நினைவில் நிற்கின்ற எமது அன்புத் தெய்வங்களே! இப்பூவுலகில் நாம் நல்ல மனிதராய் தலை நிமிர்ந்து நிற்க நேர்மையுடனும் நாணயத்துடனும் பாசத்துடனும் நல்ல பரிவுடனும் எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கி விட்ட உங்களை நாம் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எமது குடும்பத் தலைவி விஜயாம்பாள் மறைவு கேட்டு நேரிலும், தொலைபேசியிலும், தபால், தந்தி, இரங்கல் அட்டைகள் மூலமும் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் அவசிய உதவிசெய்தவர்களுக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

*82/5,நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்.* T.P.. 3147 (C/18338)

# யாழ். மதுவரித் திணைக்களத்துக்கு ஆளணி, வாகன வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் மதுவரித் திணைக்களம் தனது நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்வதற்கு போதிய வளங்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது என்று அத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முழுமனதோடு இயன்ற வரை எமது கடமையை செய்து வருகின்றோம். இவ்வருடத்தில் இதுவரை 270 வரையிலான கசிப்பு உற்பத்தி தொடர்பான குற்றச் செயல்களைக் கண்டுபிடித்துள்ளோம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் மூலைமுடுக்கெங்கும் வியாபித்துள்ள கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த எமது திணைக்களத்தில் போதிய ஆளணி வசதி இல்லை. அத்தோடு வாகன வசதிகளும் இல்லை.

வட பிராந்தியம் முழுவதற்கும் எமது திணைக்களத்திற்கு ஒரேயொரு வாகனம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனைக்கொண்டும் சில சமயங்களில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியுமே எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9-ரி)

## தேவையான மருந்துகள் இங்கு அனுப்பப்படவில்லை

கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மத்திய மருந்து விநியோகப் பிரிவு இவ்வருட மூன்றாம் காலாண்டுக்கான (காலாண்டுக்கான) மருந்து வகைகளின் ஒருபகுதி மருந்துகளைக் கடந்த வாரம் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் இம்மருந்துகள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

ஏற்கனவே தேவை எனக் கேட்டிருந்த மருந்து வகைகள் முற்று முழுதாக இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றும்—

அஸ்பிரின் குளிசைகள் கூட அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் —

யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இம்மருந்து வகைகள் யாழ். சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் யாழ். சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஆகியவற்றிற்குப் பங்கீடு செய்து விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 21

சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல வருடாந்தத் திருவிழா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழா நடைபெறும். நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 9. 30 க்கு ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலி முடிவில் மாதாவின் திருச்சொரூப பவனி சொரூப ஆசிர் என்பனவற்றுடன் விழா நிறைவு பெறும். இன்று பிற்பகலிலும் நாளை காலையிலும் விசேட பஸ் சேவைகள் நடைபெறுமென ஆலய பரிபாலகர் அறிவிக்கின்றார். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், நக்கா வீதி புனித திரேசாள் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும், நாளை மறுதினம் ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். திருப்பலி முடிவில் புனித திரேசாவின் திருச்சொரூப பவனி, சொரூப ஆசிர் என்பனவற்றுடன் விழா முடிவடையும். (க)

★ ★ ★

உடுப்பிட்டி. இமையாணன் அருள்மிகு ஸ்ரீமுருகன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. (க-4)

★ ★ ★

யாழ்ப்பாணம். செப். 21

உடுப்பிட்டி இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது (ப-7)

★ ★ ★

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் புரட்டாதி முதலாம் சனிக்கிழமையை ஒட்டி நாளை காலை 8.30 மணி முதல் நவக்கிரக ஹோம சாந்தி இடம்பெறவுள்ளது. (ஐ-3)

## விஷேட அபிஷேகம்

முதறிஞர் பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்களின் 85ஆவது அகவை நிறைவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் விஷேட அபிஷேகம், பூஜை என்பன நடைபெற உள்ளன. (ஐ-73)

## காலியாகவுள்ள அதிபர் பதவிகள்

வடமராட்சிக் கல்வி வலயத்திலுள்ள I ஏபி பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளில் இருந்து அதிபர்கள் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து ஏற்பட்டுள்ள இந்த அதிபர் பதவிகளை நிரப்பும் பொருட்டு கோரப்பட்டுள்ள இவ் விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும் எனவும், அதிபர் தரத்திலுள்ளவர்களே விண்ணப்பிக்க வேண்டும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (க-15)

## கலந்துரையாடல்

வடமராட்சியில் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை நெல்லியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சியில் இயங்கும் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் விவரங்கள் (நிரந்தர, இடம்பெயர்ந்த) கல்வி முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றுடன் வருகை தருமாறு வடமராட்சி பாலர் ஆசிரியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, செப். 21

வலிகாமம் வலய தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விபரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் மல்லாகம் ம. வி.

### 18 வயதுப் பிரிவு

மல்லாகம் குளமங்கால் றோ. க. பாடசாலை எதிர் வயாவிளான் ம. வி. (க-86)

★ ★ ★

வலிகாமம் வலய உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

இணுவில் மத்திய கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி. (க-86-152

★ ★ ★

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டுக் கழகம் 7 பேர் பங்குகொள்ளும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## வேம்படி மகளிர் மாணவியருக்கு!

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இருந்து கடந்த ஆண்டு ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களை கல்லூரிக்கு வந்து உடனடியாகப் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஐ-7)


## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

**உயிரியல் விஞ்ஞான கற்கைநெறி- 2001/2002**

**விவசாய விஞ்ஞான கற்கைநெறி- 2001/2002**

(வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01)

உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் - 01 இல் மேலதிகமாக 26 பேர் தெரிவாகியுள்ளனர். இவ்விவரங்களை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

விவசாய விஞ்ஞான கற்கை நெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் — 01 இல் மேலதிகமாக 19 பேர் தெரிவாகியுள்ளனர் இவ்விவரங்களை யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

ஏற்கனவே அறிமுக நிகழ்ச்சிகள் ஆரம்பமான படியால் தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 05 - 10 - 2001க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

விஞ்ஞான பீட விரிவுரைகள் 15 - 10 - 2001, விவசாய பீட விரிவுரைகள் 04 - 10 - 2001 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/18345)


## மரண அறிவித்தல்கள்

### செல்லையா நவரத்தினம் (இரத்தினம்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் என அழைக்கப்பட்ட செல்லையா நவரத்தினம் அவர்கள் நேற்று (20-09-2001) வியாழக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் இலக்சுமியின் அன்புக் கணவரும் சுதுமலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா—வள்ளியம்மை தம்பதிகளின் மகனும் உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்—இராசமணி தம்பதிகளின் மருமகனும் சாந்தலக்சுமி (ஜேர்மனி), சாந்தீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன் (கனடா), சுசிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் திபாகரன், வசிகரன், மிதுலா, சுஜீகரன், நிசாந்தன், நிருபிகா, நிரோசன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசையா (முழங்காவில்), அழகம்மா மற்றும் இரத்தினசிங்கம், சரஸ்வதி, வேதராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21—09—2001) வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு உயரப்புலத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கரையான்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. சாந்தீசன் (மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(92514)

### திருமதி தயாளம் இரட்ணாதிக்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, கிறீஸ்தவக் கல்லூரி, கோப்பாய்)

கோப்பாயைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளம் இரட்ணாதிக்கம் (19-9-2001) புதன்கிழமை யேசுவின் மகிமைக்குள் சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற ஜெயம் இரட்ணாதிக்கத்தின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும் திருமதி ரஞ்ஜினி மனோகரன் (லண்டன்), திருமதி ஜெயந்தி ஒளிசேகரம் (ஆஸ்திரேலியா), திருமதி குமாரினி வண்டமியூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கோப்பாய் மத்தி.
தகவல்:
ரஞ்ஜினி மனோகரன்

(92526)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவி செல்வி யோ. யசிந்தினி அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கு. யோகநாதன்

அவர்கள் 20-09-2001 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகிறோம்.

முகாமைத்துவ மாணவர்கள்,
2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்.

(92523)

## உலகில் சமாதானம் மலரவேண்டி
# இந்து ஆலயங்கள், வீடுகள் எங்கும் 'ஆதிமூல பிரணவரின் பாவநாச யாகம்'
## வழிபாட்டை நடத்தக் கோரிக்கை

உலகில் நிரந்தர சாந்தியும், சமாதானமும் மலரவேண்டி அடுத்த மாதம் 2ஆம் திகதி நாட்டில் உள்ள சகல இந்து ஆலயங்கள், இந்துக்களின் வீடுகள் ஆகியவற்றில் "ஆதிமூல பிரணவரின் பாவநாச யாகம்" என்னும் விசேட வழிபாட்டை நடத்துமாறு உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அன்றையதினம் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சம்பந்தப்பட்ட இடங்களில் பஞ்சாட்சர மந்திரத்தை இடைவிடாது ஜெபிக்கும் படியும் -

பஞ்சாட்சர ஜெபம் முடிவடைந்ததும் ஆலயங்களில் கண்டாமணிகளை ஒலிக்கச் செய்து ஒன்றுபட்ட மனத்துடன், ஒரே குரலில் உலக சமரச சன்மார்க்கப் பிரார்த்தனையை நிகழ்த்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதியை உலக "ஆன்மீக ஒருமைப்பாட்டுத் தினமாக"ப் பிரகடனம் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அமைப்பினர் ஐ.நா.சபையிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.(க-7)

# இணுவிலில் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.21

"முரண்பாடுகளைத் தீர்த்தல்" என்ற தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ள பதினொராவது கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பொறுப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தேசியக்கல்வி நிறுவக விரிவுரையாளர்களான திருமதி புஷ்பா சின்னையா, திருமதி தனலஷ்மி விஸ்வநாதன் மற்றும் பேராசிரியர் சபா. ஜெயராஜா ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர்

(க-7)

### குருநகரில் துணை இழந்தோர் மாதர் சங்கம்

துணை இழந்தோர் மாதர் சங்கம் குருநகர் சனசமூகநிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குருநகர் சனசமூகநிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கணவனை இழந்துள்ள பெண்கள் சுமார் 280பேர் இந்தச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

(க-51)

### ப.நோ.கூ. சங்க கிளைகளில் ரவை விற்பனை

அரியாலை,செப்.21

யாழ்.ப.நோ.கூ. சங்கம் அதன் கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு ரவையை விநியோகித்து வருகிறது.

ரவை தற்போது ப.நோ.கூ. கிளைகளில் கிலோ 30 ரூபாவுக்கு விற்பனையாகி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சமாசத்தால் தருவிக்கப்பட்ட ரவை மா குடாநாட்டில் உள்ள சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது. (க-17)

**NOTICE**

UNIVERSITY OF JAFFNA
FACULTY OF MEDICINE
**COMMENCEMENT OF LECTURES - 2001 BATCH**

The lectures for the 2001 batch (New Admissions) of Students will commence on 01st October 2001

Registrar,
University of Jaffna, Sri Lanka.
2001.09.14 (C-18341)

---

உளங்கனிந்த நன்றியுடன்
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கொக்குவில், தாவடி வேம்படி முருகமூர்த்தி கோயில்**

மேற்படி ஆலயப் புனரமைப்புக்கு முதற்கட்டமாக ரூபா ஐந்து லட்சம் ஒதுக்கித் தந்தமைக்காக



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர்*

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

*அவர்களுக்கும்*



*ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கொக்குவில் மைந்தனுமான*

**கௌரவ சி.தவராசா**

*அவர்களுக்கும்*



*எமக்கு இந்நிதியைப் பெற்றுத்தர முன்னின்று உழைத்தவரான நல்லூர் பிரதேசசபைத் தலைவரும் யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதி அமைப்பாளருமான*

**உயர்திரு.க.மணிபல்லவராஜன்**

JPUM (நிஷாந்தன்)

*அவர்களையும்*


நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கொக்குவில் தாவடி, வேம்படி முருகமூர்த்தி கோயில்.* தர்மகர்த்தா சபை, திருப்பணிச் சபை, கொக்குவில் மேற்கு பொதுமக்கள்.

(92499)

---

# கட்டாயக் கல்வி பிரசார தினம்







21 செப்ரெம்பர் 2001
19 ஒக்ரோபர் 2001

We Serve

(92509)

---


# A/L DAY CLASS 2002 மீட்டல்

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | :- குழந்தை | அரசியல் | :- கியூபேட் |
| இந்து நாகரிகம் | அருள்நங்கை | புவியியல் | :- கந்தசாம |
| | | வரலாறு | :- சின்னராசா |
| அளவையியல் | :- சயந்தன் | கி.நா. | :- ரங்கன் |
| நாடகமும் அரங்கியலும் | குழந்தை சண்முகலிங்கம் | | |

**ஆரம்பம்:- 24-09-2001** *(காலை 9மணி)*

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(92398)


---

மக்கள் நலன்காக்கும் பிரிவு, தலைமையகம்
இருபாலைச்சந்தி, கோப்பாய்

## அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

30.06.2001 நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஆரம்பகால, ஆயுட்கால, ஏனைய சகல அங்கத்தவர்களைக் கொண்ட புதிய அங்கத்துவ டாப்பை தயாரிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சகல அங்கத்தவர்களும் அதற்குரிய விண்ணப்பத்தைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று 31.09.2001க்கு முன்பு பதிவை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- நிர்வாகம்.

(92510)

---


அதிதீரன் மின்சார தொழில்நுட்ப நிலையம்
யாழ்ப்பாணம்

## பயிலுநர் விண்ணப்பம் கோரல்

**NAITA** *சான்றிதழுக்கான "மின்கம்பி பணியாளர்" பயிற்சி.*

| | |
|---|---|
| பயிற்சிக் காலம் | :- 03 வருடங்கள் (முழுநேரம்) |
| தகைமை | :- இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத G.C.E. O/L இல் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி. |
| வயதெல்லை | :- 18 - 25 (ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும். விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.) |

விண்ணப்பத்தை 30-09-2001க்கு முன்னர்
*"இயக்குநர்"*
*அதிதீரன் மின்சார தொழில்நுட்ப நிலையம்,*
*135, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

★ மேற்படி இந்நிலையத்தின் பணிகள்:
- மின்கம்பி அமைத்தல் (தனி, மூன்று நிலைமை) கொன்ரக்ஸ்.
- மின்புள்ளி வடிவமைப்பு வரைபடங்கள் வரைதல்.
- மின்னியல் (Electrical) சாதனங்கள் சீர்செய்தல்.
- மின் இயந்திரங்கள் மீள முறுக்குதல்.

★ மேற்படி நிலைகளில் பயிற்சி பெற்ற பணியாளர்களை இதனோடு இணைந்த தொழில் நிறுவனங்கள் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

- இயக்குநர் -

(92511)


---

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**

*காரைநகரில் வாழும் மக்களின் நலனுக்காக*

We Serve

தீவக லயன்ஸ் கழக அனுசரணையுடனும்
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின்
ஒத்துழைப்புடனும் நடத்தும்

# மாபெரும் இலவச மருத்துவ - கண் பரிசோதனை முகாம்

*காலம்* : 23.09.2001 ஞாயிறு காலை 8.00 - 12.00 மணிவரை
*இடம்* : டாக்டர் ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்.

தற்போது வசதிக் குறைவுடன் வாழும் காரைநகர் மக்களின் நலனுக்காக தங்கள் நிபுணத்துவ சேவையை அர்ப்பணிப்புடன் வழங்க இருக்கும்,

**யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள்**

| கண் சத்திரசிகிச்சை நிபுணர் | மகப்பேற்று நிபுணர் | பொது வைத்திய நிபுணர் |
|---|---|---|
| **டாக்டர் S.குகதாசன் அவர்கள்** | **டாக்டர் G.பவானி அவர்கள்** | **டாக்டர் K.மகேசன் அவர்கள்** |

★ கண் வெள்ளைப்படலத்தால் (கற்றாக்) பாதிப்புற்றோருக்கான சத்திரசிகிச்சையை மேற்கொள்ள யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் தேவை ஏற்படின் கண்ணாடி வில்லையும் (EOL) பெற்றுத்தரப்படும்.
★ கண் பார்வையும் பரிசோதனை செய்யப்பட்டு வசதியற்றோருக்கு மட்டும் அவர்களுக்குரிய மூக்குக் கண்ணாடியும் அன்றைய தினம் வழங்கப்படும்.
★ சலரோக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனையும் வழங்கப்படும்.
★ முக்கிய மருந்துகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு: காரைநகர் மக்களுக்காக சிரமங்களுக்கு மத்தியிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இம்முகாமைப் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் S.S.தங்கராஜா *(சேவை இணைப்பாளர்).*

லயன் வைத்திய கலாநிதி நவமலர் கனகரெத்தினம் *(கழகத் தலைவர்).*


சேவை பிரசுர உதவி :-

**RUBA VERSATILE TRADE**

104 A, STANLEY ROAD, JAFFNA.

(C/18340)

## தலைமைத்துவ பயிற்சிப் பாசறை.

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.இந்துக்கல்லூரி இன்றறக்ட் கழகத்தின் ஏற்பாட்டிலான தலைமைத் துவப் பயிற்சிப் பாசறை நாளை சனிக கிழமை காலை 9 மணி முதல் கல் லூரியில் இடம்பெறவுள்ளது.(ஐ-3)

# திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்ட மும் இணைந்து நடத்திவரும் திரைப் படக் காட்சித் தொடரில் நாளை சனிக் கிழமை காலை 10 மணிக்கு புவி யியற்துறை மண்டபத்தில் 'சவியர்' (Savior) என்னும் திரைப்படம் காண் பிக்கப்படவுள்ளது.

இதில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ-4)


**லஷ்சுமி** இணுவில்

விஜய், தேவயானி நடித்த

**ப்ரெண்ட்ஸ்**

(92532)

24ஆம் திகதிமுதல்

**கண்ணோடு காண்பதெல்லாம்**

காட்சிகள்:- 11.00, 2.30 (பழையநேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

அர்ஜுன், சோனாலி மற்றும் பலர் நடிப்பில்

**கண்ணோடு காண்பதெல்லாம்**

(C/18274)

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2, 5 (புதிய நேரம்)
24.09.2001 முதல்

அலாவுதீனும் அற்புத விளக்கும்

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்றுமுதல்
அர்ஜுன், மனீஷாகொய்ராலா, ரகுவரன் நடித்த

**முதல்வன்**


(ரீல்ஸ்)

(92515)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)


## முதலாவது பிறந்த தினம்

HAPPY BIRTH DAY



21 - 09 - 2001

கரவெட்டி, ஸ்ரீ நாரத வீதியைச் சேர்ந்த சிவா - ரதி தம்பதியினரின்

**செல்வப்புதல்வன் சி.ஆர்த்திகன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை, கரவெட்டியில் இன்று (21.09.2001) வெள்ளிக்கிழமை கொண்டாடுகின்றார்.

இவர் நீடூழி வாழ பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனை வரும் வாழ்த்துகின்றார்கள்.

*கரவெட்டி.* (92530) **அப்பா, அம்மா.**

# யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

# JAFFNA DISTRICT MASTER BAKERS ASSOCIATION

## பத்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| 1. முதலாம் பரிசு - | தொலைக்காட்சி (கலர்)<br>இலக்கம்:- 5876<br>க.குணரத்தினம்,<br>மகாதனை,<br>நெல்லிப்பழை. | அன்பளிப்பு - திரு.சிறிமுகுந்தன்,<br>யாழ்ப்பாண வர்த்தக நிலையம்,<br>302, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| 2. இரண்டாம் பரிசு - | வீடியோ டெக்<br>இலக்கம்:- 2007<br>கி.பரமகுருநாதன்,<br>காங்கேயன் பேக்கரி,<br>மல்லாகம். | அன்பளிப்பு - பேண்ஸ் பிலிப்,<br>லங்கா பிறைவட் லிமிட்டெட்,<br>124, ரெம்லேஸ் வீதி,<br>மவுண்ட்லவனியா,<br><br>றூபா பன்முக வர்த்தக நிலையம்,<br>104 A, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| 3. மூன்றாம் பரிசு - | ஒடியோ கசற் றேடியோ<br>இலக்கம்:- 246<br>ப.சவுண்டீஸ்வரன்<br>நியூதுர்க்கா பேக்கரி,<br>கொக்குவில் கிழக்கு. | அன்பளிப்பு - மக்கள் வங்கி,<br><br>சாலுகா நகை மாடம்,<br>200 G, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

ஆறுதல் பரிசில்கள்:-

| | | |
|---|---|---|
| 1. மின்விசிறி | இலக்கம்:- 5038<br>எம்.கிளாறன்ஸ்,<br>யா.ப.நோ.கூ.சங்கம்,<br>யாழ்ப்பாணம். | அன்பளிப்பு - எஸ்.யோகராசா,<br>தினேஸ் அம்பாள் பேக்கரி,<br>கல்வியங்காடு. |
| 2. மின்விசிறி | இலக்கம்:- 4910<br>யோ.மேரிகுயின்கெஞ்யா,<br>10/6, புதிய வீடமைப்புத் திட்டம்,<br>குருநகர், யாழ்ப்பாணம். | அன்பளிப்பு - மா.நாகலிங்கம்,<br>லக்ஷ்மி பேக்கரி,<br>அச்சுவேலி. |
| 3. மின்விசிறி | இலக்கம்:- 1761<br>பி.மோகன்,<br>லக்ஷ்மி பேக்கரி,<br>ஆறுகால்மடம். | அன்பளிப்பு - இ.அமரசேனாபதி,<br>சீவரெத்தினம் பேக்கரி,<br>வல்வெட்டித்துறை. |
| 4. மின்விசிறி | இலக்கம்:- 2434<br>இ.குமாரசாமி,<br>சுவர்ணா பேக்கரி,<br>சுன்னாகம். | அன்பளிப்பு - ச.துரைச்சாமி,<br>ஆனைப்பந்தி அம்பாள் பேக்கரி,<br>யாழ்ப்பாணம். |
| 5. மின்விசிறி | இலக்கம்:- 3306<br>சி.கந்தசாமி,<br>தும்பளை,<br>பருத்தித்துறை. | அன்பளிப்பு - ந.தர்மசீலன்,<br>சீலன் பேக்கரி,<br>நவாலி. |
| 6. மின்விசிறி | இலக்கம்:- 3061<br>கு.சிவலிங்கம்,<br>ஐங்கரா பேக்கரி,<br>நாவலர்மடம்,<br>நெல்லியடி. | அன்பளிப்பு - ஐ.யோகநாதன்,<br>சுபாஸ் பேக்கரி,<br>நெல்லியடி. |
| 7. மின்விசிறி | இலக்கம்:- 4276<br>ஆ.சிறிபாஸ்கரன்,<br>ராஜா பேக்கரி,<br>மாலுசந்தி வீதி,<br>வதிரி, கரவெட்டி. | அன்பளிப்பு - வே.ஆறுமுகம்,<br>ஆறுமுகம் பேக்கரி,<br>வதிரி, கரவெட்டி.<br>த.வசந்தகுமார்,<br>கணபதி பேக்கரி,<br>உரும்பிராய். |

வெற்றி பெற்றவர்கள் தங்கள் பற்றுச்சீட்டை அலுவலகத்தில் ஒப்படைத்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.


எமது பத்தாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்கி எம்மைக் கௌரவித்தோருக்கும், விழாவில் கலந்துகொண்ட பிரதம விருந்தினருக்கும், வங்கி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும், பரிசில்களை அன்பளிப்புச்செய்த உரிமையாளர்களுக்கும், கோப்பாய் லயன்ஸ் கழகத்தினருக்கும், கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்துகொண்ட சகல அணி களுக்கும், மைதான ஒத்துழைப்பு நல்கிய யாழ். கொய்யாத்தோட்ட சனசமூக நிலையத்தினருக்கும், பெருந்திரளான அங்கத்துவக் குடும்பத்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
யா.மா.பே.உ..சங்கம்.

(C/18344)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து சிறந்த பணிகளை ஆற்றிவருகின்ற*



**உயர்திரு.சற்குணானந்தன் கைலாசநாதன்**

(B.A.Dip.IN - Edu., S.L.P.S. - I)

அவர்கள் 1996-06-01 ஆம் திகதி முதல் திறமை மூப்பு அடிப் படையில் இலங்கை அதிபர் சேவையின் முதலாந் தரத்திற்கு (S.L.P.S. - I) பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரை உள மகிழ்ந்து வாழ்த்திப் பாராட்டுவதுடன் மென்மேலும் பல பதவி யுயர்வுகளைப் பெற்றுச் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ எல்லாம்வல்ல வேட்டாள வைரவப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள்,
*யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.*

(92519)


## கரன் பிறின்ரேர்ஸ்

KARAN PRINTERS

நிறுவனம் உங்களுக்கு அளிக்கும் விஷேட சலுகைகள்

- *ஆய்வுக் கட்டுரைகள் கணனி வடிவமைப்பிற்கு:-*
  பக்கம் ஒன்றிற்கு 25
  அதிக பக்கங்களுக்கு மேலும் சலுகை உண்டு.
- *போட்டோப் பிரதி:-*
  A4 இரண்டு பக்கங்கள் 3/- மட்டும்
- *கவரிடல் சகல அளவுகளும்*

❖ பிறந்த நாள், திருமண வாழ்த்து மடல்கள்.
(84 இற்கும் மேற்பட்ட வடிவங்களில்)
❖ உயர்தர விஞ்ஞான கணிதப் பிரிவினருக்குரிய பல்வேறு புத்தகங்கள்
❖ அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள்
❖ ஆண்டு 11 இற்கு உட்பட்ட சகல பிரிவினருக்குமான பயிற்சிப் புத்தகங்கள், புத்தகங்கள்.

அனைத்தும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
(இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கே.)

கரன் பிறின்ரேர்ஸ்,
303, 303 A, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி. (92574)

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி தம்பிஐயா

புங்கன்குளம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி தம்பிஐயா நேற்றுமுன்தினம் (19.09.2001) புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோமளவனிதா, உதயகுமார், சிறீகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், சின்னம்மா, நல்லையா ஆகியோரின் அன்பு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அரியாலை.* (92529) தகவல்: **மைத்துனர்.**

# ஆஸ்திரேலிய கடலில் பிடிபட்ட 24 இலங்கையரும் நாடுகடத்தல்

கொழும்பு,செப்.21

கடந்த ஏப்ரல் மாதம் ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழையமுயன்ற சமயத்தில், பிடிபட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 24 இலங்கையர்களையும், இலங்கைக்குத் திருப்பி அனுப்ப ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்துள்ளதாக ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

ஆஸ்திரேலிய கடற்பகுதியில் படகு ஒன்றில் பயணித்த சமயம் இவர்கள் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த 24 இலங்கையர்களையும் ஏற்றி வந்த படகின் தலைமை மாலுமி உட்பட 9 இலங்கையர்களுக்கு நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலிய நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,

சட்டவிரோதமான முறையில் இரு படகுகளில் யேமன் நாட்டின் ஏடன் துறைமுகத்திற்குள் பிரவேசித்த 116 இலங்கையர்களும் விமானம் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இவர்களை விமான மூலம் இங்கு அனுப்பிவைப்பதற்கு 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று அந்நாட்டின் துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் உக்ரைன் நாட்டுக் கொடிகளுடன் காணப்பட்ட இரு கப்பல்களும் மீண்டும் பயணத்தை மேற்கொள்ளும் நிலையில் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## யோகசிகாமணிக்கு யாழ். நீதிமன்றில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,செப்.21

கடந்த செவ்வாயன்று காலமான மேல் நீதிமன்ற நீதிபதி ந.யோகசிகாமணிக்கு நேற்று யாழ்.நீதிமன்றத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று நீதிமன்றக் கடமைகள் ஆரம்பிக்கப்பட்டபோது மேல்நீதிமன்ற நீதிபதி யோகசிகாமணிக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி செ.கோமகஸ்வரன் விடுத்த கோரிக்கையை நீதிவான் இ.த.விக்னராசா ஏற்றுக் கொண்டார்.

இதனையடுத்து நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராசாவும் -

யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி செ.யோகேஸ்வரனும் அஞ்சலி உரையாற்றினர்.

## இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியுள்ள கடிதத்திலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பு அந்தத் தினங்களில் யுத்தநிறுத்தம் மேற்கொண்டு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கு முழு ஆதரவும் வழங்கும் என்றும் -

கடந்த காலங்களில் இது போன்று, ஆதரவைத் தமது அமைப்பு வழங்கியுள்ளது என்றும் - அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மரதன் ஓட்டப் போட்டி

உடுவில் வடக்கு தமிழ் ஒளி சனசமூக நிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நாளை சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் ஆண்களுக்கான 15 மைல் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பல விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும்.

நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு பரிசளிப்பு விழாவும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறவிருக்கின்றன.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைத தலைவர் க.கமலசேகரனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு சன சமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சி. செல்வவிநாயகமும் கலந்து கொள்வர். (ஐ-3)

## கிளிநொச்சியில் மிதிவெடி!

வவுனியா,செப்.21

கிளிநொச்சியில் மருதநகப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் வளவைத் துப்புரவு செய்து கொண்டிருந்த நா.தம்பிப்பிள்ளை (வயது 65) என்பவர் மிதிவெடியில் சிக்கிக் காயம் அடைந்தார். (உ-3)

## 'குமுதினி' படகுச் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,செப்.21

அவசர திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக, குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையில் நடத்தப்பட்டு வருகின்ற 'குமுதினி' படகுச் சேவை இன்று தொடக்கம் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ-3)

## ஆணைக்குழுக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பியுடன் அரசு தனித்தனியே நடத்திய பேச்சுக்களின்போது உடன்பாடு காணப்பட்ட விதத்தில் அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, அதனை ஆதரிக்க முடியுமென்றும் -

அரசு வேறு விதமான திருத்த யோசனைகளை முன் வைத்திருப்பதால் எந்த விதத்திலும் அதற்கு ஆதரவு வழங்க முடியாதென்றும் -

மற்றைய எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அப்போது உறுதிபடத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (உ-ஒ)

## ஆசிரியர் சங்க புனரமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பளைக் கல்விக் கோட்டத்திற்கான கிளையின் புனருத்தாரணக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய ம.வித்தியாலயத்தில் இயங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களையும், ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ-3)

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காந்திராஜ் நிரோசன் (வயது 18) என்பவர் கடந்த 18 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மாணவனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அதிபர்கள் சங்கத் தலைவர் க. இராஜதுரை யாழ்.பொலீஸ் அத்தியட்சகரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.நீதிமன்றத்தில் இன்று அவரை ஆஜர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதிபருக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

## 4 ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையீடு இன்றி - செயற்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டால் மட் டுமே அதற்கான திருத்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களிப்பது என்றும் -

இந்த உத்தரவாதம் வழங்கப்படும் நிலை இல்லாவிட்டால் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க வேண்டி ஏற்படும் என்றும் -

ஐ.தே.கட்சியினர் தெரிவித்தனர்.

ஆணைக்குழுக்கள் எவரின் தலையீடும் இன்றி சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் என்பதே தங்களது நிலைப்பாடு என்று தெரிவித்த ஜே.வி.பி. பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்போது இந்த விடயத்தை ஆராயலாம் என்றும் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

சுதந்திர ஆணைக்குழுக்கள் விவகாரம் தொடர்பாக நேற்று தாங்கள் ஐ.தே.கட்சிப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பெறுபேறுகளை ஜே.வி.பி. பிரதிநிதிகள் நேற்றிரவே ஜனாதிபதியைச் சந்தித்து எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


ஐயக்கடன்

A/L 2002

திரு. பாலவாசன்

B.B.A. (F.M.Spl.)

Sat., Sun. → 12 - 1

ஆரம்பம்: 22.09.2001 → Sat.

(92501)

விக்னா கல்வி நிறுவனம்


# காரைநகரில் ஞாயிறன்று இலவச மருத்துவ முகாம்

## பல வைத்திய நிபுணர்கள் சிகிச்சை அளிப்பர்

காரைநகர்,செப்.21

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், தீவக லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ் போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இலவச மருத்துவ கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட உள்ளது.

காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடத்தப்பட உள்ள இந்த மருத்துவ முகாமில் காது,மூக்கு,தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.சிவசுப்பிரமணியம், மகப்பேற்று நிபுணர் ஜி. பவானி, கண்சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.குகதாசன், பொது வைத்திய நிபுணர் கேமகேசன் ஆகியோர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கண்பார்வை பரிசோதனை செய்யப்பட்டு பாவிக்கவேண்டிய மூக்குக் கண்ணாடி அன்றைய தினமே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கண் விழி வெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கு சத்திர சிகிச்சை செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் தேவைப்படின் கண்ணாடி வில்லையும் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-73-15)

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணை சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு -

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றினால் போதுமா அல்லது நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரமும் பெறப்பட வேண்டுமா என்பதையே உயர் நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்யவிருக்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைத்ததும் இந்தப் பிரேரணை மீதான விவாதத்தைத் திங்களன்று நாடாளுமன்றம் ஆரம்பிக்கும். (உ-3)

## குட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறக்க விடுவது தனது பொழுது போக்கு என்றும் -

இதற்காக 'லைசென்ஸ்' பெற்றிருப்பதாகவும் -

அந்த வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப வர்த்தகருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டா என்பது குறித்து பொலீஸார் ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

பிரஸ்தாப வர்த்தகர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார். (உ-3-10)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள்திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக எந்தவித முறைப்பாடுகளும் இதுவரையில் பதிவு செய்யப்படவில்லை என்பதை வதிவிடப் பிரதிநிதி உறுதிப்படுத்தினார்.

மட்டக்களப்பில் அரச படை நிலைகளின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தவிருப்பதாக வெளியான செய்திகள் குறித்துக் கருத்து வெளியிட்ட வதிவிடப் பிரதிநிதி -

யுத்தச் சூழ்நிலை ஒன்று ஏற்பட்டால், அதில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மதிக்கப் படவேண்டியதன் அவசியம் பற்றி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வலியுறுத்தும் என்றும் அவர் கூறினார்.

நெருக்கடியான சூழ்நிலை ஒன்று ஏற்பட்டால் -

வைத்தியசாலை போன்ற அத்தியாவசிய சேவைகள் தடைப்பட்டால் அவற்றை சீர்செய்யும் பணிகளில் ஈடுபடவும் -

புலிகள் மற்றும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையிலான போக்குவரத்து வசதிகள் தடைப்பட்டால், அதனை சீர்செய்யவும் -

செஞ்சிலுவைச் சங்கம் தயாராக உள்ளதாகவும் - அவர் மேலும் சொன்னார். (ஒ-10)




சாட்டி

சிந்தாத்திரை மாதா திருநாள்

22-09-2001

இன்று (வெள்ளி) மாலை 5 மணி - நற்கருணை விழா

நாளை (சனி) காலை 6 மணி - முதல் திருப்பலி

காலை 9.30 - ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலி

இன்று பிற்பகலிலும் நாளை காலையிலும் பேருந்து சேவைகள் நடைபெறும்.

நாளை காலை 6.30 மணிக்கு சில்லாலை, பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய இடங்களிலிருந்து பஸ்கள் புறப்படும்.

போலியோ தடுப்பு மருந்து

சாட்டி ஆலயத்தில் நாளை குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து கொடுக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- பரிபாலகர்.

(9253l)



மறந்து விட்டீர்களா? அரிய சந்தர்ப்பம்..!!

வாருங்கள்! வந்து பாருங்கள்!!

அதிசயம்! அற்புதம்!! ஆனால் உண்மை!!!

(மாந்திரீகம் இல்லை)

பிள்ளையில்லாக் கவலையா? திருமணமாகாத சோகமா? பலநாள் கண்ட நோயா? தீராத மனநோயா? இளைஞருக்கும் ஏற்படும் பல சோகமா? பீனிசமா? பைத்தியமா? எதுவாயினும் சித்தவைத்திய முறைப்படியும், நாகசாந்தி, கருடசாந்தி, அக்கினி சாந்தி, புத்திரதோஷம், கிரகதோஷம் போன்றவற்றினால் தீர்த்துச் சுகம் பெற்ற அடியார்கள், தமிழ்நாடு இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ், லண்டன் போன்ற நாடுகளிலிருந்தும் பாராட்டும் பல நன்றிக் கடிதமும் பெற்ற பிரபல சந்நிதான பூசகர். ஒரு முறை வந்தால் உண்மை புரியும்.

உங்கள் கவலை எதுவாயினும் தீருமிடம்:

பெரிய தம்பிரான் (சிவன்) ஆலயம், உடுப்பிட்டி.

வெள்ளி, சனி - காலை 7.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் பூசை. இதில் குறிகேட்கலாம்.

ஏனைய நாள்களில் காலை குறிப்பு வைத்தியம் உண்டு.

*குறிப்பு:* ஆலயத்தில் புரட்டாதி சனிவாரத்தில் காலை 7.00 மணிக்கு பூசையும் மாலைப் பூசை 4 மணி தொடக்கம் 6 மணி வரை எள்பொட்டலம் சனீஸ்வர கிரக அர்ச்சனைகளும் நடைபெறும்.

4ம் வாரம் காலை 8.00மணிக்கு சனீஸ்வரன் காக வாகனத்தில் வீதியுலா வருவார் என்பதனையும் விசேட பூசை அர்ச்சனையும் உண்டு என்பதனையும் அறியத்தருகின்றேன்.

க.கனகநாயகம்,
மிருசுவில் வடக்கு,
V.S.P.குமார்
கல்கனா ஸ்ரோர்,
அச்சுவேலி.
V.சுந்தரலிங்கம்
உடுப்பிட்டி.

பண்டிதர் செ.சிவக்கொழுந்து
பூசகரும் ஆதீனகர்த்தரும்
சித்த மருத்துவர்
பெரியதம்பிரான் கோயில்
இமையாணன், உடுப்பிட்டி.

(C/18346)



மிற்சுயி (MITSUI) சீமெந்து விநியோகம்

எதிர்வரும் வார முற்பகுதியில் வரவிருக்கும் மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சீமெந்துகளின் ஓடர்களை பதிவுசெய்துகொள்ளுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

✳ MITSUI NO. 1 CEMENT IN SRI LANKA ✳

❖ மிற்சுயி நம் நாட்டின் முதல் தர சீமெந்து ❖

தொடர்பு:

ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

T.P. - 2407

(C/18342)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.